திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 12 டிசம்பர் 2005

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

டிசம்பர்-05

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S.,	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. பி.வீரணன்	உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம், பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ.,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்

பல்கலைக்கழக உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 99
பகுதி : 12
டிசம்பர் 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

இதழ்மணம் 341

வஞ்சிக்காண்டம் 343
பேராசிரியர் (மேஜர்) கதிர்மகாதேவன்,

வளர்தமிழ் 350
முனைவர் இரா.கோதண்டராமன்

இன்றைய தமிழியல் ஆய்வுகள் 358
முனைவர் ம.சா. அறிவுடைநம்பி

சிந்தாமணி கூறும் அறம் 365
தி.வே.கோபாலையர்

இதழ்மணம்

பயன்பாட்டு மொழியியற் கழகத்தில் அண்மையில் மதுரை மாநகரில் மொழி நூல் அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் நினைவுச் சொற்பொழிவு நடைபெற்றது. முனைவர் ரெ. பெரியாழ்வார் நீலகிரி, மலைவாழ் தோடர்கள் மற்றும் பிற இனத்தவர்களுடைய மொழி குறித்த ஆய்வுரை ஆற்றினார். சிறுபான்மை இனத்தவர்களுடைய மொழி அழிந்து வருவதை அவர் சுட்டிக் காட்டினார். முதுபெரும் பேராசிரியர்கள் ஆய்வு மாணாக்கர்கள் சொற்பொழிவைக் கேட்டுக் கலந்துரையாடினார்கள். பேராசிரியர் முருக ரத்தினம் போன்ற அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். இருந்தும் இப்போது வகுப்பறைகளில் மாணவர்களைச் சந்தித்துப் பாடம் நடத்தும் மொழி ஆசிரியர்கள் பெரும்பாலும் கலந்து கொள்ளாதது வருந்தத்தக்கது. பேராசிரியர் நீதிவாணன் நிகழ்ச்சியைப் பெரிதும் முயன்று ஏற்பாடு செய்துள்ளார். அப்பெரும் பேராசிரியர் கல்வி சார்ந்த முயற்சியில் ஈடுபாடு கொண்டு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது பாராட்டுக்குரியதாகும்.

சென்ற இதழில் பேராசிரியர் இரா. கோதண்டராமன் அவர்கள் குற்றியலுகரம் குறித்த ஆய்வுக்கட்டுரை வெளிவந்தது. இவ்விதழில் வளர்தமிழ் என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. மொழி குறித்த ஆய்வுப் பார்வை இக்கட்டுரையின் உள்ளீடாக அமைந்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் உலகமெங்கும் வாழ்கின்றனர். அவர்கள் பேசும்மொழி வட்டார வழக்கு, சாதி வழக்கு, செவ்வியல் வழக்கு எனப் பல வகையில் மாற்றம் பெற்று வழங்குவதை ஆய்ந்துள்ளார். எழுத்துலகில் செவ்வியல் நெறியை மிகப் பழையகாலம் தொடங்கி தமிழ் நெறியாக அறிஞர்கள் போற்றி வருவது குறிப்பிடத்தக்கது. மொழியில் நிகழ்ந்துள்ள ஒலி மாற்றங்களை வாசகர் சிந்தனைக்குக் கொண்டுவந்துள்ளார்.

பேராசிரியர் கதிர் மகாதேவன் அவர்கள் தொடர்ந்து சிலப்பதிகாரம் குறித்துச் சொற்பொழிவும் கட்டுரையும் எழுதி வருகிறார்கள். இவ்விதழில் **வஞ்சிக்காண்டம்** குறித்த கட்டுரை இடம் பெறுகிறது. சேரன் செங்குட்டுவன் வடக்கு நோக்கிப் படைஎடுத்து பதினெட்டு நாழிகையில் வடவரை வென்று கண்ணகிக்குக் கல் கொணர்ந்ததும் தன் தாய் அரசமாதேவியார் கங்கையில் நீராடி நாடு திரும்பிய செய்தியையும் படிக்கும் நமக்கு எழுச்சியும் மகிழ்ச்சியும் அளிக்கிறது. வரலாற்று ஆசிரியர் மாறுபட்டு உரைக்கும் செய்தியைக் குறிப்பிட்டு மறுத்திருப்பது நினைவு கொள்ளத்தக்கதாகும். தெற்கே இருந்து வடக்கு நோக்கிச் சென்ற பல செய்திகள் இருட்டில் மறைக்கும் முயற்சியை ஆசிரியர் சுட்டிக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முதுமுனைவர் **அறிவுடை நம்பி** அவர்கள் **இன்றைய தமிழியல் ஆய்வுகள்** என்னும் தலைப்பில் மாணவர் ஆசிரியர்கள் ஆய்வுப் பணியை பொறுப்புடன் ஆற்றத்தவறிய சூழலை எடுத்துரைத்து பின்பற்ற வேண்டிய நெறி முறைகளை எடுத்துரைத்திருப்பது சிந்தனைக்குரியதாகும்.

முதுபெரும் அறிஞர் **தி.வே.கோபாலையர்** சீவகசிந்தாமணியில் கட்டமை ஒழுக்கம் குறித்து விரிவான விளக்கம் அளித்துள்ளார். சமுதாயத்தில் வெவ்வேறு நிலையில் உள்ள பல்வேறு பகுதியினரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தை வரையறை செய்துள்ளது. பாழ் செய்யும் உட்பகையை ஒழிக்க உதவும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

☘☘☘☘☘

வஞ்சிக்காண்டம்

பேராசிரியர் (மேஜர்) கதிர்மகாதேவன்,
எம்.ஏ. எம்லிட் பிஎச்.டி
முன்னைத் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

வஞ்சிக் காண்டம் இளங்கோவடிகள் எழுதினாரா ? என்ற கேள்வியை ஒரு வரலாற்று ஆசிரியர் எழுப்பியுள்ளார். இவ்வரலாற்று ஆசிரியர் ஆங்கிலத்தில் அந்த நூலை எழுதியுள்ள காரணத்தால் பலருக்கும் இப்படி ஒரு வினா எழுந்துள்ளது என்பதை அறியமாட்டார்கள்.

அந்த வரலாற்று ஆசிரியர் சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் எழுதவில்லை என்று சொல்லவில்லை. ஆனால், சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தை இயற்றியவருக்கு வரலாறும் தெரியவில்லை. வடக்கே, படையெடுத்துச் சென்றதை விவரிக்க இந்தியாவின் நிலவியலும் தெரியவில்லை என்று எழுதிவிட்டுச் சென்றுவிட்டார். ஆங்கிலத்தில் இந்த நூல் எழுதப்பட்டுள்ள காரணத்தால், மேலை நாட்டினருக்கு இது சிலப்பதிகாரத்தைப் பற்றிய குறைபாடாக அமைந்துள்ளது. எனவே, இக்கட்டுரையின் நோக்கம் வஞ்சிக்காண்டம் சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதியேயாகும் என்பதும், இளங்கோவடிகளே அதன் ஆசிரியர் என்பதும் மெய்ப்பிக்கும் காரணத்தால் எழுதப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டுள்ளது என்ற உண்மையை ஒப்புக்கொள்வார்களேயானால், அக்காப்பியத்தில் மூன்றாம் காண்டமாகிய வஞ்சிக்காண்டத்தை எழுதாமல் போயிருக்கமுடியாது. ஏனென்றால், இளங்கோவடிகள் சேரநாட்டினர்.

சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவனின் பேராண்மையைக் காட்டவே ஆக்கப்பட்டுள்ளது. வஞ்சிக் காண்டம் அமையாவிட்டால், காப்பியத் தலைவியாகிய கண்ணகியின் சீரும் சிறப்பும் புலனாகாமல் போயிருக்கும்.

சிலப்பதிகாரப் பதிகம் மூன்று உண்மைகளை கூறியுள்ளதை யாவரும் அறிவர். சிலப்பதிகாரப் பதிகத்தை இளங்கோவடிகள் தாமே எழுதவில்லை என்ற உண்மை யாவரும் அறிவர்.

பின்வரும் மூன்று உண்மைகளை வைத்து ஒரு காப்பியம் புனையப் போவதாக இளங்கோவடிகள் கூறக்கேட்ட பதிக ஆசிரியர் அத்தகைய மூன்று உண்மைகளையும் வருமாறு வரன்முறைப் படுத்தியுள்ளார்.

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்,
சூழ்வினைச் சிலம்பு காரணமாக,
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச் செய்யுள், என—

மேற்படி மூன்று உண்மைகளில், இரண்டாவதாக காணப்படும் உண்மை வஞ்சிக்காண்டம் இல்லையெனில் முழுமை அடையாது என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்வர். இது தொடர்பாக வஞ்சிக்காண்டத்தில் மூன்று உண்மைகள் கூறப்பட்டுள்ளது. அவை வருமாறு

அரும் திறல் அரசர் முறை செயின் அல்லது
பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது என,
பண்டையோர் உரைத்த தண் தமிழ் நல் உரை,
பார் தொழுது ஏத்தும் பத்தினி ஆதலின்,
ஆர் புனை சென்னி அரசற்கு அளித்து (சோழன்)
செங்கோல் வளைய உயிர் வாழாமை
தென் புலம் காவல் மன்னவற்கு அளித்து (பாண்டியன்)
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை, யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வட திசை மருங்கின் மன்னவர் அறிய,
குட திசை வாழும் கொற்றவற்கு அளித்து (சேரன்)

என்ற வரிகள் நடுகல் காதையில் காணப்படுகின்றன. வஞ்சினமும் வெஞ்சினமும் சேரன் செங்குட்டுவனால் நிறைவேற்றப்படுகின்றன.

வடக்கேயிருந்து தெற்கே படையெடுத்து வருதல் நெடுங்காலமாக நிகழ்ந்துள்ளன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இராமன் தெற்கே படையெடுத்து வந்த நிகழ்ச்சியை வரலாற்று நிகழ்ச்சியாகக் கருதிப்

பேராசியர் நீலகண்டசாத்திரி, ஆரியர்கள் தெற்கே வரும் தொடக்கமாக இராமாயணத்தை குறிப்பிடுகிறார். ஆரியமயமாகத் தெற்கு மாறியதற்கு அதிலும் குறிப்பாகத் தமிழ்நாடு வடவர் வருகை தந்ததற்குச் சான்றாக வால்மிகி இராமாயணத்தைக் கொள்கிறார். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இராமாயணக்கதைக்கு வரவேற்பு ஏற்பட்டுள்ளதை (reception) மறுக்க இயலாது. இராமரைப் பற்றிய கற்பனைகள் தேசிய கற்பனையாக மாறிவிட்டது.

குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்தபின் கோவலன் தன் மனைவி கண்ணகியுடன் மதுரை செல்லுகின்றான். அவ்இருவருக்கும் வழித்துணையாக ஒரு சமணத்துறவி வந்து சேர்ந்துகொள்கிறார். அத்துறவி அருகனையின்றி வேறொரு தெய்வம் தொழாதவள் ; இராமனுக்குற்ற துன்பத்தை எடுத்துச் சொல்கின்றாள். கோவலன் வாழ்வில் ஏற்பட்ட அவலத்தினால் துன்பத்தில் துவளும் நிலை ஏற்படுகிறது. கோவலனுக்கு ஆறுதலாகக் கவுந்தியடிகள் எடுத்துக் கூறுவது., இராமசரிதமே ஆகும்.

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி இழந்து கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது,
நீஅறிந் திலையோ நெடுமோழி யன்றோ

வேதங்களை அருளிய நான்முகனைப் பெற்ற திருமால் தான் இராமனாக அவதரித்தான். இது பரந்துபட்டமொழி என்று சிலப்பதிகாரத்தில் பேசப்படுகிறது. மேலும், ஆய்ச்சியர் குரவையில், இராமாயணம் எவ்வளவு பக்தி வெள்ளமாகப் பரவிக்கிடந்தது என்பதைக் காட்டுகின்றார்.

தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவிஎன்ன செவியே
திருமால்சீர் கேளாத செவிஎன்ன செவியே

செவிபடைத்த பயன் இராமாயணம் கேட்பது தான் என்பார் இளங்கோவடிகள்.

சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் முதல் பாடலிலேயே மகாபாரதத்தில் நிகழ்ந்த அமர்க்களத்தைப் பற்றியும், பெருஞ்சோற்று உதியன்சேரலாதன் பாண்டவர் சேனைக்கும் கௌரவர் சேனைக்கும்

சடுதியின் நடுவில் உணவளித்தான் என்பது பற்றியும் குறிப்பிடப்படுகிறது. இதுபோன்ற குறிப்புகள் கலித்தொகையில் பரக்கக் காணலாம். வடக்கே இருந்து தெற்கே படையெடுத்தார்கள் என்றால், தெற்கே இருந்து வடக்கே செல்லமாட்டார்களா ? பதிற்றுப்பத்தில் முதற்பத்து நமக்குக் கிடைக்கவில்லையென்றாலும், அப்பத்து இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பற்றியது என்ற செய்தி தெரிகிறது. பாண்டியனும் ஆரியப்படைகளோடு அமரிட்டு வெற்றி பெற்றான் என்ற குறிப்பு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று கூறுவதினால் பாண்டியர்களும் வடவாரிய சேனைகளை வென்றுள்ளனர் என்று தெரிய வருகிறது. சோழன் கரிகாற் பெருவளத்தான் இமயமலையில் சென்று வில்லையும் புலியையும் கயலையும் பொறித்தான் என்ற குறிப்புமுண்டு. வடக்கே இருந்து தெற்கே படையெடுத்தது போலச் சேரன்செங்குட்டுவன் ஆரிய மன்னர்களையெல்லாம் வென்றான் என்ற குறிப்பினை மிக அழகாக இளங்கோவடிகள் காட்டியுள்ளார்.

தேவ அசுர யுத்தம் 18 ஆண்டுகள் நிகழ்ந்தன என்றும், இராம இராவண அமர்க்களம் 18 மாதங்கள் நடந்தன என்றும், மகாபாரதப்போர் 18 நாட்கள் நடந்தன என்றும், சேரன் செங்குட்டுவன் பதினெட்டே நாழிகையில் வடவாரிய மன்னர்களை விரட்டி அடித்தான் என்றும் இளங்கோவடிகள் வருமாறு குறிப்பிடுகிறார்.

சினவேல் முன்பின் செருவெங் கோலத்துக்
கனக – விசயர் – தம் கதிர் முடி ஏற்றி
செறி கழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரை
செயிர்த் தொழில் முதியோன் செய் தொழில் பெருக
உயிர்த் தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டி என்று,
யாண்டும், மதியும், நாளும், கடிகையும்,
ஈண்டு நீர் ஞாலம் கூட்டி எண்கொள
வரு பெரும் தானை மறக்கள மருங்கின்
ஒரு பகல் எல்லை, உயிர் தொகை உண்ட
செங்குட்டுவன் தன் சின வேல் தானையோடு
கங்கைப் பேர் யாற்றுக் கரைஅகம் புகுந்து

என்ற வஞ்சிக்காண்டத்தில் இளங்கோவடிகளே சுட்டிக்காட்டுவர்.

இராமன் வருகையை வரலாறாக கருதும்பொழுது சேரன்செங்குட்டுவன் வடநாடு சென்றதையும் வடவாரிய மன்னர்களை வென்றதையும் மறுப்பது ஏன் ? என்று தெரியவில்லை. சேரன் செங்குட்டுவன் நாடு பிரிப்பதற்காகவோ வெற்றி பெற்ற நாட்டில் தனக்கு பிடித்த ஓர் ஆரிய மன்னனை ஆட்சியில் வைப்பதற்காகவோ வடக்கே செல்லவில்லை. கடவுள் எழுத ஒரு கல்லுக்காகவே இமயம் நோக்கிப் படையுடன் சென்றான்.

சேரன் செங்குட்டுவன் மாபெரும் வீரன் ஆவான். மாத்தமிழ் வீரம் காக்க எண்ணுகின்ற மனப்பாங்கு உடையவன். தான் ஒரு சிறந்த வீரன் என்பதை நிலைநாட்டவே அவன் வாழ்நாளில் ஐம்பது ஆண்டுகள் அமர்களத்தில் கழித்தவன். வடக்கே படையெடுத்துச் செல்லும் பொழுது நீலகிரி மலையின் வழியாகச் செல்லுகிறான். நீலகிரி பாடியை விடுத்து அடுத்துக் கங்கை பேரியாற்றின் கரையில் வடவர் பேராதிக்கத்தை ஒழிக்கப் போர்தொடுத்தான் என்று கூறுவதினால், வஞ்சிக்காண்டத்தை எழுதியவர்க்கு நீலகிரியை விடுத்துக் கங்கைக் கரையை அடைந்தது பெறும் ஏமாற்றத்தைத் தருகிறது என்று எழுதுகிறார். புகாரை விடுத்துப் புறப்பட்ட கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் மதுரையை அடைந்ததற்குரிய பகுதிகள் மிகத்துல்லிமாக வருணிக்கப்படுகின்றன. ஆனால், வடநாட்டிற்குச் சென்ற வழி வருணிக்கப்படுவதற்கு உரியவை என்றாலும், அவ்வாறு வருணிக்கப்படவில்லை என்று அந்த வரலாற்று ஆசிரியர் தன் நூலில் கூறுகின்றார். கண்ணகியின் சிலை வடிக்க இமயமலையில் சிறிய கல் ஒன்றை எடுத்துக் கங்கையில் நீராட்டிச் சேரநாட்டில் கோயில் அமைப்பதே சேரன்செங்குட்டுவனின் நோக்கமாகும். இந்த வரலாற்றுப் பேராசிரியருக்குக் கண்ணகிக்குச் சிலை எடுத்தது கற்பனை என்று தோன்றலாம். யாரோ ஒருவர் சேரன் செங்குட்டுவனின் புகழ்பாடுவதற்காக எழுதப்பட்ட காண்டமாக அவ்வாசிரியர் கருதலாம்.

சேரன் செங்குட்டுவனுக்கு வடநாட்டிற்குச் செல்ல வழிகாட்டுவதற்கு யாரும் தேவையில்லை. அவன் பெரும்படையுடன் செல்கின்றான். முதல்முறையாக சேர நாட்டிலிருந்து இமயமலைவரையில் சென்றிருப்பானாயின் ஒருபால் அவன் மேற்கொண்ட நெடுவழிப் பயணம் விவரிக்கப்பட்டிருக்கும். சதுரங்க சேனையுடன் செல்லும்பொழுது இடைப்பட்ட நிலத்தை வருணிக்க வேண்டிய தேவையில்லை. அத்தகைய வருணணைக்கு வாய்ப்பும் இல்லை. சேரன் செங்குட்டுவன் கோடை காலத்தில் மலைவளம் காணச் சென்ற பொழுது அவன் சென்ற நிகழ்ச்சி

செம்மையாக வருணிக்கப்படுகிறது. ஏனென்றால், அவன்தன் மனைவி வேண்மாளுடன் மலைவளம் கண்டு மகிழ்வதற்காகச் சென்றான். ஓர் அரசன் தன் மனைவியுடன் செல்லும் பொழுது அவன் பார்த்த மலைவளத்தையும் கேட்ட ஒலிகளையும் அங்கு வாழ்கின்ற மக்களின் மனநிலைகளையும் வருணிப்பதில் பொருள் உண்டு.

இங்கு ஓர் உண்மை சுட்டிக்காட்டப்படல் வேண்டும். முதன்முறையாகச் சேரன் செங்குட்டுவன் கங்கை பேரியாற்றின் கரைக்குச் செல்லவில்லை. இஃது இரண்டாம் முறையாகச் சேரன் மேற்கொண்ட பயணமாகும். செங்குட்டுவனின் அன்னை கங்கை ஆற்றில் நீராட விரும்பினாள். அரசமாதேவி ஆழநீர் கங்கையில் மூழ்கி நீராட விரும்பினாள் என்றால், பேரரசன் குட்டுவன் அதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்வான் அல்லவா ? பாதுகாப்பிற்காக பெரும்படையுடன் தன் அன்னையை அழைத்துச் சென்றான். கங்கைக் கரையில் இருந்தவர்கள் அனைவரையும் விரட்டியடித்தான். அதனைச் சேரன்செங்குட்டுவனின் சேனைத் தலைவன் வில்லவன்கோதை வருணிக்கிறான். ஆரிய மன்னர்கள் ஆயிரம்பேர் உன்னை எதிர்த்தனர். பல்வேறு மன்னர்கள் அணிவகுத்தனர். அவ்அனைவரையும் வென்று படைகடந்து நின்றபொழுது யமன்கூட நினது படையாற்றலைக் கண்டு வியந்து கண் விழித்துக் கண்டதை வருமாறு கூறுகிறார்.

கொங்கணர், கலிங்கர், கொடுங் கருநாடர்
பங்களர், கங்கர், பல் வேல் கட்டியர்
வட ஆரியரோடு, வண்தமிழ் மயக்கத்து, உன்
கடமலை வேட்டம் என் கண் - புலம் பிரியாது
கங்கைப் பேர் யாற்றுக் கடும் புனல் நீத்தம் ,
எம் கோமகளை ஆட்டிய அந் நாள்,
ஆரிய மன்னர் ஈர்-ஐஞ்ஞூற்றுவர்க்கு
ஒரு நீ ஆகிய செரு வெங் கோலம்
கண் விழித்துக் கண்டது, கடுங் கண் கூற்றம் ;

மேற்கூறிய வரிகளால் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்காக வடக்கே கங்கை பேரியாற்றைக் கடந்து சென்றது முதல்முறையன்று. இரண்டாவது முறையாக அங்குச் சென்றான் என்பது தெளிவாகிறது. இந்த வரலாற்றுப் பேராசிரியர் கண்ணகிக் கோட்டம் அமைப்பதைக் கற்பனை என்று எண்ணிவிட்டார். கண்ணகிக் கோட்டம்

கண்டுபிடிக்கப்பட்டது மட்டுமல்ல ஆண்டுதோறும் தமிழர்கள் விழா எடுக்கிறார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரத்தை ஏடு பெயர்த்து எழுதிய அனைவரும் மூன்று காண்டங்களையும் ஒரு தொகுதியாகவே கொண்டனர். வஞ்சிக்காண்டம் இல்லாத ஏடு இருந்ததாகச் செய்தி இல்லை. அடியார்க்குநல்லார்க்கு முன்பே தோன்றிய அரும்பதவுரைக்காரர் வஞ்சிக்காண்டத்துக்கும் சேர்த்தே அரும்பதவுரை வகுத்துள்ளார்.

தமிழியல் ஆய்வில் தோய்வு கொண்ட இருபெரும் பேராசிரியர்களாகிய டாக்டர் தெ.பொ.மீ. அவர்களும். டாக்டர் மு.வ. அவர்களும் வஞ்சிக்காண்டம் பற்றிக் கூறிய கருத்துக்கள் குறிப்பாகச் சுட்டிக்காட்டத் தக்கன. டாக்டர் தெ.பொ.மீ அவர்கள் இதுபற்றிக் கூறும்பொழுது இந்நூல் முப்பது காதைகள் கொண்டது. செம்பாதியாக நிற்பது பதினைந்தாம் காதையாம் அடைக்கலக் காதையே. எனவே, நூலின் நடுநிலையாம் உயிர்நிலையே இது எனலாம் என வரைந்துள்ளார்.

டாக்டர் மு.வ. அவர்கள் இதுபற்றிக்கூறும்பொழுது கண்ணகியின் புகழைச் செங்குட்டுவ மன்னன் கல்லிலே நாட்டிக் கோயில் எழுப்பினான் இளங்கோவடிகள் கலையிலே அமைத்துக் காவியம் இயற்றினார் என்று கூறுவர்.

வஞ்சிக்காண்டத்தின் இறுதியில் இளங்கோவடிகள் அனைவருக்கும் அறிவுரை கூறுகிறார். இக்காப்பியக் கதையைப் படித்தும் கேட்டும் இருப்பவர்கள் பல உண்மைகளை மனத்தில் கொண்டு வாழவேண்டும் என்பதை,

> பரிவும் இடுக்கணும், பாங்குற, நீங்குமின்
> தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
> பொய் உரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்

பொய்யுரை அஞ்சுமின் என்று கூறுகின்ற இளங்கோவடிகள் வஞ்சிக்காண்டத்தை வஞ்சிப்பதற்காக எழுதினார் என்று கூறுவது மடமையல்லவா ?

பேராசிரியர் (மேஜர்) கதிர்மகாதேவன்,
எம்.ஏ. எம்லிட் பிஎச்.டி
முன்னைத் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

☘☘☘☘☘

வளர்தமிழ்

முனைவர் இரா.கோதண்டராமன்
தொல்காப்பியர் அடிப்படை ஆய்வு மையம்
புதுச்சேரி - 605 008.

1. செய்திப் பரிமாற்றத்திற்குக் கருவியாக விளங்கும் தமிழானது பலவகைப்படும். தமிழில் சரியாகப் பேசுவது எழுதுவது எப்படி என்ற கேள்விக்கு விடை காண்பதற்குமுன் பலவகையான தமிழில் எந்த தமிழில் சரியாக பேசுவது எழுதுவது என்ற கேள்விக்கு விடை கண்டாக வேண்டும். தமிழைச் சாதி வழக்குத் தமிழ், வட்டார வழக்குத் தமிழ் பொதுப் பேச்சு வழக்குத் தமிழ், செவ்வியல் வழக்குத் தமிழ் என்று நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். பார்ப்பனத் தமிழைச் சாதி வழக்குத் தமிழ் என்றும் ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சாதியினர் பேசும் தமிழை வட்டார வழக்குத் தமிழ் என்றும் குறிப்பிடலாம். தமிழகம் முழுவதும் பேசப்படும் தமிழைப் பொதுப் பேச்சு வழக்குத் தமிழ் என்று இனங்காணலாம். பாடநூல்களிலும். ஆய்வேடுகளிலும் அரசாணைகளிலும், செய்தி அறிக்கைகளிலும் பயன்படும் தமிழைச் செவ்வியல் வழக்குத் தமிழ் எனக் கருதலாம்.

2. நேக்கு, நோக்கு, நன்னா, எப்பொ வந்தேள், பாலு சுடராது, கொழந்த நன்னா பாடித்து முதலான பிரயோகங்கள் பார்ப்பன வழக்குத் தமிழில் பயின்று வழங்குவனவாகும். ராமு நல்லா பாடுகான், வயிறு பசிக்கு சுமதி வேகமாயிட்டு ஒடுதா, மாடு மேயுது, ராமு பாடுக பாட்டு சுமதி சொல்லுத கத முதலான பிரயோகங்கள் வட்டார வழக்கினவாகும். இவற்றின் நிகழ்ச்சியை நெல்லை மற்றும் குமரி மாவட்டத்தில் வழங்கும் தமிழில் காணலாம். ராமு நல்லா பாடுறான், ராமு பாடு பாட்டு, சுமதி சொல்லுர கதை, மாடு மேயுது முதலான வழக்குகளைப் பொதுப் பேச்சுத் தமிழில் காணலாம். பொது பேச்சுத் தமிழ் என்பதும் ஒரு வட்டார வழக்குத் தமிழேயாகும். இந்தத் தமிழ் தமிழகத்தின் வட மாவட்டங்களில் பயின்று வழங்கினாலும் தமிழகம் முழுவதும் இது பேச்சு வழக்கில் இடம் பெற்றுள்ளது.

3. மேலே குறிப்பிட்ட நான்கு வகை வழக்குத் தமிழில் செவ்வியல் தமிழ் தவிர ஏனைய மூன்றுக்கும் தாய்மொழியாளர்கள் உள்ளனர். தாய்மொழியாளர்கள் பேசும் மொழி அவர்கள் குழந்தைப் பருவத்தினராக இருக்கும்போதே தாய், தந்தை, உற்றார், உறவினர், சுற்றுப்புறத்தினர் ஆகியோர் மூலம் அறிமுகமாகும் மொழியாகும். ஆகவேதான் செவ்வியல் தமிழுக்கும் தாய்மொழியாளர்கள் இல்லை என்று மேலே கூறப்பட்டது. பேச்சுத்தமிழானது – அது எந்த வகைப் பேச்சுத் தமிழாயினும் – பள்ளியில் கற்பிக்கப்படும் மொழியல்ல. ஒரு குழந்தை பள்ளிக்கு வருவதற்கு முன்பே பேச்சுத் தமிழை நன்கு பேச அது பழகிக்கொள்கிறது. பள்ளியில் அந்தக் குழந்தைக்குப் பேச்சுத் தமிழை கற்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே பள்ளியில் பேச்சுத் தமிழை எவ்வாறு சரியாகப் பேசுவது, எழுதுவது என்ற கேள்விக்கு இடமில்லை. செவ்வியல் தமிழ் என்பது பேச்சுத் தமிழுக்கு நேர் மாறானது. இதற்குத் தாய்மொழியாளர்கள் கிடையாது. இந்த மொழி ஐந்து அல்லது ஆறு வயது தொடங்கி, பள்ளியில் பாடநூல்கள் மூலம் அறிமுகப்படுத்துவதாகும். செவ்வியல் தமிழுக்குத் தாய்மொழியாளர்கள் இல்லையாதலால் அதனை பேசுவதற்கும் எழுதுவதற்கும் தனிப்பயிற்சி தேவைப்படுகிறது. எந்தத் தமிழில் சரியாகப் பேசுவது எழுதுவது என்று நாம் தொடக்கத்தில் எழுப்பிய கேள்விக்கு விடை செவ்வியல் தமிழை மட்டுமே கருத்தில் கொண்டதாகும். செவ்வியல் தமிழில் சரியாகப் பேசுவது எழுதுவது எப்படி என்பதைப் பற்றிச் சிந்திப்பதற்குமுன் கிளைமொழி வழக்குகள் பற்றிக் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.

4. மொழியானது பலவகையான பேச்சு வகைகளைக் கொண்டதாகும். இந்தப் பேச்சு வழக்குகளை நாம் கிளைமொழிகள் என்று குறிப்பிடுகிறோம். சங்கப் பாடல்களில் கூடக் கிளைமொழி வழக்குகளைக் காணலாம். பாடுவோம் என்று இக்கால செந்தமிழில் வழங்கும் சொல்லானது பழந்தமிழில் பாடுகம், பாடுதும், என்று பலவாறாக வழங்கும். இந்தப் பலவகை வழக்குகளும் பலவகைக் கிளைமொழிகளைச் சேர்ந்தவையாகும். இயல்பான பேச்சு மொழியில் பேச்சு வகைகள் அதாவது கிளைமொழிகள்

பொதுவாகக் கலந்து பேசப்படுவதில்லை. ஒவ்வொரு கிளை மொழிக்கும் ஒரு குறிப்பிட்ட பேச்சு வட்டம் (Speech or Discourse Areas) உண்டு. இந்த பேச்சு வட்டத்துக்குள் மிக அரிதாகவே கிளைமொழியின் ஊடுருவல் நிகழும். உளுந்து என்னும் சொல் பழந்தமிழிலும் தமிழகத்தின் தென் மாவட்டங்களிலும் உழுந்து என வழங்குகிறது. இக்காலச் செவ்வியல் தமிழில் வழங்கும் உளுந்து என்பது ஒரு கிளைமொழியிலிருந்து ஊடுருவியதாகும். தென் மாவட்டக் கிளை மொழிகளில் வழங்கும் சுளகு என்ற சொல் வட மாவட்ட கிளை மொழிகளில் முறம் என்று வழங்குகிறது. வட மாவட்டங்களில் சுளகு வழங்கினால் இந்தப் பகுதியில் தென் மாவட்டத்தினர் குடியேறி அந்தச் சொல்லை இந்த மாவட்டங்களில் இடம்பெறச் செய்துள்ளனர் என்றுதான் கொள்ள வேண்டும்.

5. கிளைமொழிகளின் பேச்சுக்களங்கள் (Discourse Areas) வரையறுக்கப்பட்டவையாகும். இந்த வகையில் பார்த்தால் தாய்மொழியார் இல்லாத செவ்வியல் த்மிழும் ஒரு கிளைமொழிதான். இந்தக் கிளைமொழியில் இன்னொரு கிளைமொழி கலப்பதற்கு வாய்ப்பில்லை. எடுத்துக்காட்டாக, மாதவி நன்றாக பாடுகிறாள் என்ற வாக்கியமானது மாதவி நல்லா பாடுறா என்றோ மாதவி நல்லா பாடுகிறாள் என்றோ செவ்வியல் வழக்கில் அமைவதில்லை. இதேபோல் அவங்க நல்லா பாடுறாங்க என்ற வாக்கியம் அவர்கள் நல்லா பாடுகிறார்கள் என்றோ அவங்க நன்றாக பாடுறாங்க என்றோ பேச்சுத் தமிழில் அமைவதில்லை. "செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே, எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற பாரதியின் பாடலில் காணப்படும் பாயுது, பிறக்குது ஆகிய பேச்சு வழக்குப் பிரயோகங்கள் விதிவிலக்காகும். கவிதைக்கு அது பொருந்தலாம். பிற நிலைகளில் இதனை ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபாகக் கருத முடியாது.

6. இனி செவ்வியல் தமிழில் சரியாகப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடையில் காணப்படும் இணக்கமில்லாத நிலையைச் சில

எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கலாம். தொல்காப்பியர் தொடங்கித் தமிழ் இலக்கணிகள் பலரும் தமிழ் நெடுங்கணக்கில் ஐகாரத்தையும் ஔகாரத்தையும் உயிர் நெடிலாகக் கொள்கின்றனர். இவற்றுக்கு இணையான குறில்களுக்குத் தமிழிலாகட்டும் பிற திராவிட மொழிகளிலாகட்டும் இடமில்லை. ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஆகிய ஐந்து நெடில்களுக்கும் இணையான குறில்கள் தமிழிலும் பிற திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றன. இதனின்றும் இனக் குறில் இல்லாத ஐகாரத்துக்கும் ஔகாரத்துக்கும் தமிழில் இடமில்லை என்பது தெளிவாகின்றது. ஆயினும் தமிழிலக்கணிகள் இந்த இரண்டு எழுத்தொலிகளையும் தமிழ் நெடுங்கணக்கில் நுழைத்தது தமிழ் எழுத்தியலின் தனித் தன்மைக்கு பொருந்துவதாக இல்லை. ஔகாரம் தமிழில் நௌவி, கௌவு, பௌவம், வௌவால், ஔவை ஆகிய குறைந்த எண்ணிக்கையுள்ள சொற்களில் மட்டுமே மொழி முதலில் நிகழ்கின்றது. இந்தச் சொற்களில் ஔகாரத்தை நீக்கி அகரத்தையும் வகர ஒற்றையும் சேர்த்து எழுதினால் நிகழும் கேடு என்ன ? ஒரு கேடும் இல்லை என்பதுமட்டுமல்ல ஔகாரம் இரண்டு மாத்திரை அளவினதாகிய நெடில் என்ற இலக்கணிகளின் கூற்றும் பொருந்தாமல் போய்விடுகின்றது. இது ஐகாரத்திற்கும் பொருந்தும். ஆயினும் தவறு என்று தெரிந்தும் ஐகார, ஔகாரங்களை நெடில் என்று கற்பிக்கும் வகையில் நமது பாடத்திட்டம் அமைந்துள்ளது.

7. ஐகாரத்தையும் ஔகாரம் போலவே ஆராயலாம். ஐந்து ஐயர் ஆகிய சொற்களில் மொழி முதலிலும் வளையல், இடையார் ஆகியவற்றில் மொழி இடையிலும் பறவை, பாறை ஆகியவற்றில் மொழி இறுதியிலும் நிகழ்வதாக கருதப்படும். ஐகாரத்தை இரண்டு மாத்திரை அளவுள்ள நெடிலாகக் கொள்ள முடியாது. அகரமும் யகர மெய்யும் சேர்ந்த கூட்டமைப்பின் வரிவடிவமாக ஐகாரம் கருதத்தக்கதாகும். இந்தக் கூட்டமைப்பில் நிகழும் அகர உயிரையும் யகர மெய்யையும் ஐகாரம் நிகழும் இடங்களில் எழுதலாம். வளையல், கலையரசி ஆகியவற்றில் நிகழும் யகரத்தை உடம்படுமெய்யாக கருதமுடியாது. ஐகாரத்தில் நிகழும் யகர

மெய்யாகவே அதனைக் கருத வேண்டும். வளையல், கலையரசி இவற்றில் ஐகாரம் அகரமாகக் கொள்ளத்தக்கதாகும். ஐயர் என்பதில் நிகழும் யகரம் ஐகாரத்தில் நிகழும் யகரத்தின் இரட்டிப்பு ஒலியாகும். இந்த அடிப்படை உண்மைகளைக் கருத்தில் கொள்ளாமல் தமிழ் இலக்கணிகள் ஐகாரத்தை நெடிலாகக் கொண்டதால் இடையன், வளையல் ஆகிய சொற்களில் ஐகாரம் குறுகி ஒலிப்பதாக கருதினர். ஐகார ஔகாரங்கள் தமிழுக்குத் தேவையில்லாத கூட்டொலி எழுத்துக்களாம். பிராமி நெடுங்கணக்கின் தாக்கத்தால் தமிழில் இடம் பெற்ற இந்த இரண்டு எழுத்துகளையும் தவிர்ப்பதால் தமிழ் நெடுங்கணக்கில் 38 எழுத்துகளின் எண்ணிக்கை குறையும். ஐகார ஔகாரங்கள் தமிழ் நெடுங்கணக்கில் இருக்கும்வரை பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடையில் ஒரு சமரசத்தை ஏற்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். குழந்தைகளுக்கும் இது ஒரு தீராத தலைவலிதான்.

8. பேசுவதும் எழுதுவதும் ஒத்துப்போகாத இன்னொரு நிலையையும் செவ்வியல் தமிழில் காணலாம், இலக்கணிகள் தமிழில் ஆறு வல்லொற்றுக்களைக் குறிப்பிடுவார்கள். அவற்றுள் றகர வல்லொற்றும் ஒன்றாகும். இதன் வல்லொற்றுத் தன்மையை ஊற்று, காற்று கீற்று பற்று முதலான சொற்களில் முதல் றகரத்தின் ஒலிப்பில் காணலாம். தமிழில் இடையொற்று ரகரமும் உள்ளது. இதன் நிகழ்ச்சியை வரம், வீரம், தரகு, உரம் முதலான சொற்களில் காணலாம். வல்லொற்று றகரம் உயிர்களுக்கு இடையில் இடையொற்று ரகரமாக ஒலிக்கப்படுகிறது. இந்த நிலையை பறவை, முறம், மறைவு முதலான சொற்களில் காணலாம், பொற்குடம், கடற்கரை, தொழிற்சாலை. பிற்பகல், நற்பணி முதலான தொடர்களிலும் வல்லொற்று றகரம் இடையொற்று ரகரமாகத் திரிந்து ஒலிக்கிறது. இயற்கை, செயற்கை, முதலான சொற்களிலும் இதே நிலை தான். வல்லொற்று றகரம் இடையொற்று ரகரமாகத் திரிந்ததால் நேர்ந்த எதிர்மறை விளைவை இங்கே குறிப்பிட்டாக வேண்டும், இடையின ரகரத்தை அடுத்து இரண்டு வல்லொற்றுகள் நிகழ வாய்ப்புள்ளது. இதனைத் தீர்ப்பு , சேர்க்கை, வளர்ச்சி உலர்த்து முதலான சொற்களில் காணலாம். ஆனால் வல்லொற்று

றகரத்தை அடுத்து இரட்டித்த வல்லொற்றுக்கள் நிகழ்வதில்லை. பயிற்சி, கற்பு, இயற்கை முதலான சொற்களில் இந்த நிலையைக் காணலாம். வல்லொற்று றகரம் இடையொற்று ரகரமாகத் திரிந்ததன் விளைவாக, வல்லொற்று றகரத்தை அடுத்து வல்லொற்றுகளை இரட்டித்து எழுதும் போக்கு பரவலாகக் காணப்படுகிறது. முயற்சி, இயற்கை, கற்பு ஆகிய சொற்களில் வல்லொற்று றகரத்தை அடுத்து இரட்டித்த வல்லொற்றுகளின் நிகழ்ச்சி தமிழ் எழுத்தியல் மரபுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். தொடக்கநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். வல்லொற்று றகரம் இடையொற்று ரகரமாகத் திரிந்தது திரிந்ததுதான். அதை இனி ஒன்றும் செய்யமுடியாது. உயிர்கள் இடையிலும், வல்லொற்றின் முன்னும் றகர வல்லொற்று நிகழும் சொற்களையும் பயின்று வழங்கும் தொடர்களையும் தொகுத்துப் போதிய பயிற்சி அளிப்பதன் மூலமே தமிழின் றகர வல்லொற்றுத் தொடர்பான எழுத்தியல் மரபுகளைக் கவனத்தில் கொள்ள முடியும். வல்லொற்று றகரத்தை எழுதி இடையொற்று ரகரமாக ஒலிப்பது தமிழ் எழுத்தியல் மரபுக்கு மாறுபட்டதாயினும் இங்கே பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடையில் சமரசம் செய்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

9. இடையொற்றுக்களுள் ஒன்றாகிய ழகரம் சந்தியில் திரியாது என்று தொல்காப்பியர், பவணந்தியார் முதலியோரால் கருதப்பட்டாலும் வீரசோழிய ஆசிரியர் பூதமித்தரனார் அது டகரமாக திரியும் என்று குறிப்பிடுகிறார். இரட்டித்த சகரத்தின்முன் மட்டுமே இந்த நிலை காணப்படுகிறது. தமிழ்ச்செல்வி என்ற தொடரில் ழகரம் காணப்பட்டாலும் ஒலிப்பு நிலையில் அந்த ஒலி டகரமாகவே ஒலிக்கப்படுகிறது. எழுதப்படுவது தமிழ்ச்செல்வியாக இருந்தாலும் ஒலிக்கப்படுவது தமிட்செல்வியாக அமைகிறது. தாழ்ச்சி, வீழ்ச்சி, புகழ்ச்சி, முதலான சொற்களிலும் ழகரம் டகரமாகத் திரிவதாகவே தோன்றுகிறது. ஆனால் எழுத்து மரபில் ழகரமே குறிக்கப்படுகிறது. எழுதுவதும் பேசுவதும் இணங்கிப் போகாத போக்குக்கு ழகரத்தின் திரிபையும் சான்றாகக் கருதலாம்.

10. தமிழில் வல்லொற்றுகள் மொழி இறுதியில் நிகழாது என்று இலக்கணிகளால் கருதப்படுகிறது. ஆனால் இது எந்த அளவுக்கு ஏற்புடையது என்பது சிந்திக்கத் தக்கதாகும். நறுக்கென்று, சுருக்கென்று, பளிச்சென்று, பொத்தென்று, தொப்பென்று, முதலான தொடர்களில் நறுக், சுருக், பளிச், தொப் ஆகியவை நிலைமொழிகளாக இனங் காணாத் தக்கனவாகும். என்று என்பதன் முன் இந்த ஒலிக்குறிப்புச் சொற்களின் நிகழ்ச்சி காணப்படுகிறது. எகரத்தை மொழி முதலில் கொண்ட வருமொழியின்முன் மேற்படி ஒலிக் குறிப்புச் சொற்களின் ஈற்றில் நிகழும் வல்லொற்றுகள் இரட்டித்து ஒலிக்கப்படுகின்றன. இங்கே இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். இக்காலத் தமிழ்க் குழந்தைகளுக்கு அசோக், கார்த்திக், தீபக், திலீப், பிரதாப் முதலான பெயர்கள் சூட்டப்படுகின்றன. இந்தப் பெயர்கள் உயிர் முதலாகிய வருமொழியின்முன் நிகழ்கையில் அவற்றுள் நிகழும் ஈற்று வல்லொற்றுகள் இரட்டிக்கின்றன. கார்த்திக்கைப் பார் , பரத்திடம் கொடு, பிரதாப்பின் தந்தை முதலானவற்றில் இந்த நிலையைக் காணலாம். தமிழ் இலக்கணத்தில் நறுக்கென்று, , பளிச்சென்று தீலிப்பிடம் முதலானவற்றுக்கு விதிகள் இல்லை. மாறிவரும் சூழலுக்கேற்ப இவற்றை நாம் அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. மொழிப் பயிற்சியிலும் பாடத் திட்டத்திலும் இவையெல்லாம் இடம்பெற வேண்டும். இல்லாவிட்டால் இந்தச் சொற்கள் எல்லாம் சுருக், நறுக், பளிச், உட்பட தமிழ் எழுத்தியல் மரபுக்கு ஒவ்வாதவை என்று ஒதுக்கித் தள்ள வேண்டும். ஆனால், மொழியியல் நோக்கில் அதற்கு வாய்ப்பில்லை.

11. பேசுவதற்கும் எழுதுவதற்கும் இடையில் சில விகுதிகள் குறிப்பாக உம், ஆம், ஆவது, இல் முதலானவை எண்ணுப் பெயர்களை அடுத்து நிகழ்கையில் தவறுகள் நிகழ்கின்றன. இந்த விகுதிகளில் உள்ள உயிரெழுத்து எண்ணுப் பெயர்களை அடுத்து குறிக்கப்படுவதில்லை. இப்படிக் குறிக்கப்படாமல் எழுதுவது தவறாகும். செய்தித் தாள்களில் இந்தத் தவறுகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. போதிய மொழிப் பயிற்சியின்மையே இதற்குக் காரணம். எண்ணுப் பெயர்களை அடுத்து நிகழும் உம், ஆம்,

ஆவது, இல் முதலான இடைச் சொற்களின் முழு வடிவம் குறிக்கப்பட வேண்டும். உம், ஆம் ஆகியவற்றில் நிகழும் மகர மெய், இல் என்பதில் நிகழும் லகர மெய் ஆவது என்பதில் நிகழும் வது ஆகியவற்றை மட்டும் எண்ணுப் பெயரை அடுத்து குறிக்கும் தவறான மரபைத் தவிர்க்க, தமிழாசிரியர்கள் மாணவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.

12. இந்த உரையை முடிப்பதற்கு முன் செவ்வியல் தமிழில் மட்டுமே நிகழும் ஆயுதத்தைப்பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். எஃகு, அஃறிணை, பஃறுளி, அஃது, கஃசு, பஃறி முதலான சொற்களில் ஆய்தம் ககர உரசொலியாக அதாவது வடமொழியில் உள்ள ஹ என்ற ஒலியைப்போல் ஒலிக்கப்படுகிறது. ஆனால், தொடக்கத்தில் இந்த நிலை இல்லை. வல்லொற்றுகளின் முன் நிகழும் ஆய்தம் வல்லொற்றின் ஒலிப்பண்புகளை பகிர்ந்து கொள்ளும் என்று தொல்காப்பியர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இதனின்றும் ஆய்தம் ஆறு வல்லொற்றுகளையும் குறிக்கும் ஒரு பொதுக்குறியீடு என்பதும் தன்னை அடுத்து நிகழும் வல்லொற்றுக்கு ஏற்ப அதன் ஒலிப்பு அமையும் என்பது புலனாகின்றன. ஆனால் காலப்போக்கில் இந்த நிலை மாறி எல்லா வல்லொற்றுகளின் முன்பும் ஆய்தம் ககர உரசொலியாக ஒலிக்கப்படும் நிலை ஏற்பட்டுவிட்டது. இது வடமொழி விசர்கத்தின் தாக்கத்தால் நேர்ந்த விபத்தாகும். ஆய்தமானது எழுதப்படுவதைபோலவே பேசப்படுவதில்லை. மொழியில் நிகழும் மாற்றங்களை இனங்காண முடியுமே தவிர மாற்றங்களைத் தவிர்த்து முந்தைய நிலைக்கு மொழியைக் கொண்டு செல்ல முடியாது. இந்த நிலையில் செவ்வியல் தமிழை பொறுத்த வரை எழுதுவதையும் பேசுவதையும் சமரசப்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது.

☘☘☘☘☘

இன்றைய தமிழியல் ஆய்வுகள்

முனைவர் ம.சா. அறிவுடைநம்பி
தமிழ்ப்பேராசிரியர், சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி - 605 014.

தமிழகம், பாண்டிச்சேரி, கேரளம், ஆந்திரம், கர்னாடகம், புதுதில்லி முதலான மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைகழகங்களில் பல தமிழியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகங்களில் பல்லாயிரக்கணக்கான தமிழ் முதுகலைப் பட்டதாரிகள் ஆண்டுதோறும் உருவாகின்றனர். பல பல்கலைக் கழகங்களில் கூடுதலாக அஞ்சல்வழிக் கல்வி மூலம் ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பல தன்னாட்சிக் கல்லூரிகள் உயராய்வு மையமாகச் செயல்பட்டு அக்கல்லூரிகளிலும் ஆய்வியல் நிறைஞர் முனைவர் (பிஎச்.டி) பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றைக்கு வெளிவருகின்ற ஆய்வியல் நிறைஞர்., முனைவர் பட்ட ஆய்வுகள், ஆய்வு மற்றும் திறனாய்வு நூல்கள் தகுதி உடையனவாக இருக்கின்றனவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்,

முதுகலைப் பாடத்திட்டத்தில் இன்றைக்கு ஒரு நூலைக் கூட முழு அளவில் கையிலெடுத்து முதலிலிருந்து கடைசிவரை படிக்கும் வாய்ப்பு இல்லை. பல பல்கலைக்கழகங்களில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் ஒன்றைக்கூட முழுவதுமாகப் பாடத்திட்டத்தில் சேர்ப்பது இல்லை. சில பாடங்கள், சில பதிகங்கள், சில படலங்கள், சில காண்டங்கள் என்று உதிரி உதிரியாகப் பாடற்பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றையும் இன்று எத்தனைபேர் படிக்கின்றார்கள் ? என்பதும் தெரியவில்லை.

மறைமலை அடிகளார் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி என்று ஆய்வு செய்து ஆய்வுக்குப் புத்தொளி பாய்ச்சினார். இவரது மாணிக்கவாசகரின் வரலாறும் காலமும் என்ற ஆய்வு நூல் கால ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவியது. அடிகளார் தொடங்கிய கால ஆராய்ச்சி அவருடைய மாணவரான பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளையால் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்வேறு கால

ஆராய்ச்சியை மேற்கொள்ளச் செய்தது. இதனைத் தொடர்ந்து தமிழ்த் தாத்தா உ.வே சாமிநாதையர், எம்.எஸ். பூர்ணலிங்கம்பிள்ளை, நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், ரா. இராகவையங்கார், மு. . இராகவையங்கார், கா. சுப்பிரமணியபிள்ளை, தஞ்சை கே. சீனிவாசபிள்ளை , பண்டிதமணி, மு. கதிரேசன் செட்டியார் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை , விபுலானந்த அடிகளார் முதலான அறிஞர்கள் தமிழ் ஆய்வில் ஈடுபட்டுத் புத்தொளி ஊட்டினர்.

இவர்களை அடியொற்றிப் பல்கலைக்கழக அளவில் ஆய்வேடுகளை அளித்து ஆய்வு நெறிமுறைகளைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியவர்களாக ரா. பி. சேதுப்பிள்ளை, பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், மு.வரதராசன், அ. சிதம்பரநாதன் செட்டியார் வ.சுப. மாணிக்கம், மா. இராசமாணிக்கனார், மொ. அ. துரையரங்கனார் போன்றவர்கள் விளங்கினர். தொடக்க காலத்தில் பரந்துபட்ட தலைப்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர்த் தனித்தனி நூலாய்வாக விரிவடைந்தது.

இந்நிலையில் ஆய்வு நெறியாளர்கள் பெருகினர். ஆய்வாளர்களின் எண்ணிக்கை பன்மடங்காயிற்று. தொடக்க நிலையில் ஒருங்கிணைப்பு இல்லாத நிலையில் ஒரே தலைப்பில் வேறுவேறு பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் நிகழலாயின. காலப்போக்கில் நுண்ணாய்வு, திறனாய்வு, ஒப்பாய்வு, நாட்டுப்புறவியலாய்வு, உளவியல், கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், பெண்ணியம் என்றிவ்வாறு பன்முகநோக்கில் ஆய்வுகள் பல்கிப் பெருகின.

இன்றைய நிலையில் இந்தியாவில் அறிவியல் துறைகளில் நிகழும் ஆய்வுகள் உலகத் தரத்திற்கு உயர்ந்து விட்டன. அந்த அளவிற்குத் தமிழியல் ஆய்வுகள் உயர்ந்து விட்டனவா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. இன்றைக்குச் செம்மொழியாக தமிழ் திகழும் நிலையில் இன்றையத் தமிழில் ஆய்வுகளின் தரம் உயர்ந்து நிற்க வேண்டாமா? எத்தனை அறிஞர்களின் தமிழ் ஆய்வுகள் பிறரால் மேற்கோள்களாக காட்டப்படுகின்றன? இதனால் அனைத்து ஆய்வுகளும் தகுதி அற்றன என்று எவரும் கருதிவிடக்கூடாது. தகுதியுடைய தமிழியல் ஆய்வுகள் நூற்றுக்கு இருபது விழுக்காடு என்பது மிகமிகக் குறைவாகும். ஆராய்ச்சிக்குச் செலவு செய்யப்படும் பணத்திற்கு இது போதாது.

பல பல்கலைக்கழகங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் முனைவர் பட்ட ஆய்வுக்குப் பதிவு செய்கின்றனர். ஆனால் ஒரு சிலர் தான் முறையாக ஆய்வு செய்து ஆய்வேட்டை அளிக்கின்றனர். இவற்றுள் தகுதியான ஆய்வேட்டை உருவாக்குவது நெறியாளரின் கையில்தான் இருக்கிறது.

ஆய்வுக்கு வரும் எந்த மாணவரும் எதைப் பற்றி ஆய்வு செய்யப் போகிறோம் என்ற தெளிவில்லாமலேயே வருகின்றனர். ஏதாவதொரு ஆய்வுத்திட்டத்தை (Research Proposal) அவர்களால் எழுதிக்கொடுக்கமுடியவில்லை. குருவி சோதிடம், கிளி சோதிடம், நாடி சோதிடம், கேட்பது போலத் தலைப்பை நெறியாளர்களிடம் கேட்கின்றனர். எவ்வித தெளிவும் இல்லாமல் நீங்கள் என்ன தலைப்பில் ஆய்வு செய்ய சொல்கிறீர்களோ அத்தலைப்பில் ஆய்வை மேற்கொள்வதாகக் கூறுகின்றனர். சிலநேரங்களில் இன்றைக்கு நெறியாளரே ஆய்வுத் தலைப்பைக் கொடுத்து படிக்க வேண்டிய நூல்களை குறித்துக் கொடுத்து படிக்க வைத்து, செய்திகளை திரட்டச் செய்து மாணவரை வேலை வாங்க வேண்டி இருந்தது, அண்மையில் நூல் வெளியீட்டு விழா ஒன்றில் நூலாசிரியரைப் பாராட்டிப் பேசிய மற்றொருவர் அக்கூட்டத்தில் எனக்கு டாக்டர் பட்ட ஆய்வேட்டை எழுதிக் கொடுத்தவரே இவர்தான். இவர் இல்லையென்றால் என்னால் டாக்டர் பட்டம் பெற்றிருக்க முடியாது. தலைப்பை மட்டும்தான் நான் சொன்னேன் என்று கூறினார். இது எவ்வளவு வெட்கக்கேடானது. சொல்லப்போனால் டாக்டர் பட்டம் பெறாதவர்கள் சிலரே டாக்டர் பட்ட ஆய்வேடுகளை உருவாக்கித் தரும்நிலை இருப்பதைத்தானே இது காட்டுகிறது.

இதைப்போன்று ஒரு நேர்காணலின் போது நடந்த நிகழ்ச்சி. ஒரு மாணவி தமிழ் முதுகலை வகுப்பில் பல்கலைக்கழக அளவில் முதல்நிலை பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்று, ஆய்வியல் நிறைஞர் வகுப்பிலும் முதல் வகுப்பில் தேறி, தேசியத் தகுதித் தேர்விலும் (NET) வெற்றி பெற்று முனைவர் பட்ட ஆய்வு செய்து, ஆய்வேட்டை அளித்தபின் அவரைச் சந்திக்க நேர்ந்தது. ஆய்வேட்டின் தலைப்பு, இதற்குமுன் ஆய்வு செய்த ஆய்வேடுகள், நூல்கள் முதலானவற்றைப் பற்றி அவரிடம் கேட்க நேர்ந்தது. தான் அவற்றைப் படிக்கவில்லை. அவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாது எனப் பதிலிறுத்தார். பாரதி பாடல்களை ஆய்வு செய்த ஒருவர்

பாடவேறுபாடுகளுடன் வெளிவந்த ஆய்வுப் பதிப்பைப் பற்றி எதுவும் தெரியவில்லை என்று கூறியது மற்றொரு நிகழ்ச்சியாகும். ஓர் ஆய்வைத் தொடங்குவதற்கு முன்னர்த் தெரிந்திருக்க வேண்டியவற்றைத் தெரியவில்லை என்றே மேற்கண்ட இரு ஆய்வாளர்களும் கூறினர். அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர் ஏன் இதை அவர்களிடம் கூறவில்லை ? இன்றைக்கு கணிணி மூலம் இணையத்தின்வழி ஆய்வாளருக்குத் தேவையான அனைத்துத் தரவுகளையும் பெறமுடியும். இன்றைக்கு எத்தனை விழுக்காடு ஆய்வாளர்கள் இணையத்தைப் பயன்படுத்தித் தங்களுக்குத் தேவையான தரவுகளைத் திரட்டுகின்றார்கள்? எப்படியோ இவர்கள் முனைவர் பட்டம் பெற்றுவிடுகின்றனர். இச்சமுதாயத்தில் தகுதியற்றவர்களை உருவாக்குவதற்கு நட்பு, உறவு, அன்பு போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடாது.

அதேபோல இன்றைக்கு ஆய்வேடுகளில் பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. உரைநடை கைவந்த வல்லாளர் ஆறுமுகநாவலர் தாம் பதிப்பித்த, எழுதிய நூல்களில் ஒரு பிழை கண்டுபிடித்தால் அவர்களுக்கு அந்தக்காலத்தில் 1 பைசா தருவதாகக் கூறினார். அந்த அளவுக்கு மிகுந்த கவனத்துடன் தம் ஆய்வுப் பணியைச் செய்தார். ஆனால் இன்றைக்கு இலக்கண ஆய்வை மேற்கொள்கின்ற ஆய்வேடுகளில் கூடப் பிழைகள் தாராளமாக இருக்கின்றன. தமிழில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதற்கேற்ப ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள் உண்டு. அதேபோல ஒவ்வொரு புள்ளிக்கும் அதாவது மெய்யெழுத்துக்கும் பொருள் உண்டு. திருமண அழைப்பிதழில் எம்பெருமான் திருவருளால் என்று இருக்கின்ற இடத்தில் எமபெருமான் திருவருளால் என்று தவறுதலாக அச்சானால் சரியா? மெய்யெழுத்துக்குப் புள்ளி இல்லாத காரணத்தினால் பொருளே மாறிவிட்டது. எனவேதான் ஆய்வேட்டில் பிழைகள் இல்லாமல் வருதல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதேபோல இன்றைக்கு ஆய்வேடுகளில் திருட்டுப் போக்கு மலிந்துவிட்டது. ஓர் ஆசிரியர் ஒரு பல்கலைக்கழக ஆய்வேட்டைத் தட்டச்சுச் செய்து தலைப்பை மட்டும் மாற்றி அதை வேறொரு பல்கலைக்கழகத்தில் கொடுத்துவிட்டார். இத்திருட்டு

கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், ஆள்பலத்தால், சாதி பலத்தால், பண பலத்தால் அவ்வாசிரியரை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆனால் வேறுசில ஆய்வேடுகளில் இவ்வாறு தவறு செய்த ஆசிரியர்களுக்கு வேலையிலிருந்து நீக்குதல், ஊதிய உயர்வை நிறுத்துதல், பதவி உயர்வை நிறுத்துதல் போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டதுமுண்டு . அந்த ஆய்வாளருக்கு மட்டும் தண்டனை வழங்கியோடு நிற்காமல் அவரை நெறிப்படுத்திய ஆசிரியருக்கும் மூன்றாண்டுகளுக்கு அவர் எந்த ஆய்வு மாணவர்களையும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற தண்டனை வழங்கப்பட்டது.

வெளிநாடுகளில் ஒரு சிறிய ஆய்வுத்திருட்டுகூட அவருடைய ஆசிரியர், ஆய்வு வாழ்வுக்கு முடிவு கட்டி விடும். உரையாடும் போது கூறும் செய்திகளைக்கூட அவர்கள் தங்கள் ஆய்வுகளில் இன்னார் கூறியது என்று ஒத்துக் கொள்வர். ஆனால் இங்கோ பெரும் பேராசிரியர்கள் பிறர் எழுதிய நூலையே தம் பெயரில் வெளியிட்டு விடுகின்றனர்.

அண்மையில் சில நிகழ்வுகள் நிகழ்ந்தன. ஒரு பேராசிரியர் என்னிடமிருந்து பல செய்திகளைக் கேட்டறிந்தார். என்ன ஆச்சரியமென்றால் ஒரு சில மாதங்கள் கழித்து அவர் எழுதி வெளியிட்ட நூலில் என்னிடமிருந்து பெற்ற செய்திகள், கருத்துகள் போன்றவற்றை அப்படியே அந்நூலில் தாம் புதிதாகக் கண்டுபிடித்ததைப் போன்று எழுதிவிட்டார். எந்தவோரிடத்திலும் என் பெயரைச் சொல்லவேயில்லை. இதுதான் இன்றைய ஆய்வு நாகரிகம் போலும்.

உலகப் புகழ்பெற்ற தஞ்சையிலுள்ள சரசுவதி மகால் நூலகத்தில் பன்மொழிப் புலவர்கள் பலர் இருந்து வருகின்றனர். அவர்களிடம் ஏதாவது ஆய்வு தொடர்பாகக் கருத்துக் கேட்டால் அவர்கள் உடனடியாக அவ்வளவு எளிதில் கருத்துக்களையோ செய்திகளையோ கூறிவிடுவது கிடையாது. இதற்கு என்ன காரணம் என்று அவர்களிடம் கேட்டபொழுது, எங்களிடமிருந்து வேண்டிய கருத்துக்களையும் செய்திகளையும் நோகாமல் எவ்வித முயற்சியுமில்லாமல் எளிதில் வாங்கிச் சென்று விடுகின்றனர், ஆனால் அவர்கள் எழுதும் ஆய்வுகளில் எந்தவொரு இடத்திலும் எங்களுக்கு நன்றிகூடச் சொல்வதில்லை. இவர்களுக்கு ஏன் நாங்கள் தகவல்களைத் தரவேண்டும் என்று அவர்கள் பதில் கூறினர்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரைப்பதிப்பில்,

> தொல்காப்பியத்தை படிக்கும் பாக்கியம் எனக்கு 1910 ஆம் வருடம் கிடைத்தது. பொருளதிகாரத்தை படிக்கும் போது வேறு எம்மொழியிலும் காணப்படாத முதற்பொருள், கருப்பொருள் பற்றிய இலக்கண விளக்கங்கள் கூறப்பட்டிருப்பதைக் கண்டேன்... எளிய முறையில் உரை எழுத எண்ணி ஓரளவு எழுதினேன். அதனை திருசெல்வகேசவராய முதலியாரிடம் காட்டினேன். இருவரும் சரி பார்த்தோம்... சில ஆண்டுகளுக்குப் பின் ஆசிரியர் திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை நட்பு எனக்குக் கிடைத்தது பொருளதிகார உரை வெளியீட்டிற்கு துணையாக வேண்டினேன், அவரே அப்பொறுப்பை மேற்கொண்டு உரை வெளிவர ஆவண செய்தார்கள். பொருளதிகார உரைப்பதிப்பதில் பெயரளவில் நான்தான் பதிப்பாசிரியர். உண்மையில் பதிப்பாசிரியர் பிள்ளையவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உள்ளற்பாலது.

என்று பதிப்புரையில் (1936) எழுதியுள்ளார். இதுதான் ஆய்வு நேர்மை என்பது. ஆனால் இன்றைக்கு வேறு ஒருவர் எழுதிய நூலுக்கு அல்லது பதிப்புக்குத் தம் பெயரை எழுதி உரிமை கொண்டாடுவது வாடிக்கையாக நிகழ்கிறது. அடிக்கடித் திரைக்கதையில்தான் இது நான் எழுதிய கதை என்று கூறுவதுண்டு. சில நேரங்களில் திரைக்கதை எழுதியவர் வழக்கு மன்றத்திற்கும் செல்லுவதுண்டு. அதுவே தற்போது ஆய்வுலகிலும் நடைபெற்று வருகிறது.

ஆய்வுலகில் இன்றைக்கு மிகமிக வேண்டியது நேர்மை. புலமைகூடக் குறைந்திருந்தால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் ஆய்வில் நேர்மை கெட்டால் ஆசிரியசமூகமே அவர்களை ஒதுக்கித் தள்ளித் தண்டிக்க வேண்டும். இவ்வாறு தவறு செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எத்தகைய செல்வாக்குடன் இருந்தாலும் அவர்களை எதிர்த்துக் கண்டிக்கும் துணிவு வேண்டும். எந்தத்

திருட்டுக்கும் மன்னிப்பு உண்டு. ஆனால் இவ்வாறு இலக்கியத் திருட்டு செய்பவர்களுக்கு மன்னிப்பே அளிக்கக்கூடாது. உரிய முறையில் இவர்களுக்குத் தண்டனை வழங்காவிட்டால் பிற்காலச் சந்ததியினர் வழி தவறிச் செல்வதற்கு வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொடுத்தது போலாகிவிடும். இலக்கியத் திருட்டு செய்கின்றவர்களுக்குப் பாடம் புகட்டும் நிலையிலும் பின்னால் எவரும் இம்மாதிரியான திருட்டுகளைச் செய்யாமல் இருப்பதற்கேற்ற வகையிலும் அவர்களுக்குச் சரியான தண்டனை வழங்க வேண்டும். அப்பொழுது தான் ஆய்வுலகம் செம்மையுறும்.

நெறிமுறைகள்

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்வதிலும், மதிப்பீடு செய்வதிலும் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரேமாதிரியான விதிமுறைகளை உருவாக்குவது நலம் பயக்கும். மேலும் இக்கால தமிழியல் ஆய்வில் பிறதுறையறிவு மிகவும் தேவை. முனைவர் பட்ட ஆய்வுகள் புதிய கோட்பாடுகளை வகுக்கும் போக்கிலோ அல்லது அதற்குத் துணைபுரியும் போக்கிலோ அமைதல் வேண்டும். இக்கால அறிவியல் கருவிகளைப் பயன்படுத்திப் புதிய புதிய கருத்துக்களை ஆராய்ந்து எண்ணிப் பார்த்து ஆய்வேடுகளில் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். தமிழியல் ஆய்வுகள் ஒருங்கிணைந்த ஆய்வாகப் பல்துறையறிவுடன் அமைய வேண்டும். அத்துடன் ஆய்வாளர்களிடம் ஆய்வுப்பொருள் பற்றிய அறிவு, ஆய்வுப்பற்று, தன்முயற்சி. விடாமுயற்சி, (perseverence) பொறுமை உரிமை ஒப்படைப்பு (dedication), நுண்ணோக்கு, அயராத உழைப்பு, நடுவுநிலைமை, எண்ணித்துணிதல் ஆகிய பத்துக்கூறுகள் அமைதல் வேண்டும். ஆய்வாளராகத் தன்னைப் பதிவு செய்த உடனேயே இவற்றைக் கருத்தில்கொண்டு ஆய்வை மேற்கொண்டால் அது ஆய்வாளருக்கும், ஆய்வுநெறியாளருக்கும் பெருமை தருவதோடு தமிழியல் ஆய்வும் செம்மையாக அமைந்து சமுதாயத்திற்குத் தகுந்த பலனளிக்கும் என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

☙☙☙☙☙

சிந்தாமணி கூறும் அறம்

தி.வே.கோபாலையர்

சென்ற இதழ் தொடர்ச்சி

I. குடிமக்கள்

அரசன் ஒரோவழிக் கொடுங்கோலானாய் நீதி நெறிக்குப் புறம்பாக நடப்பவன் ஆனாலும் அவன் கருத்தோடு ஒத்துபோதலே குடிமக்களுக்கு நலன் பயப்பதாகும். அவன் தவறு செய்தாலும் அவனை எதிர்த்துச் செயற்படுதல் குடிமக்களுக்கு அழிவையே தரும். குணமாலையை மதயானையின் தாக்குதலிலிருந்து காப்பாற்றிய சீவகன் அரச யானையின் விருப்பத்துக்கு மாறாகத் தவறான செயல் செய்தானாகக் கருதி அவனைத் தண்டிக்க ஆயத்தம் செய்த அரசன் கட்டியங்காரனை எதிர்த்துச் செயற்படுவதை விரும்பாத சீவகன் தந்தை கந்துக்கடன் கருதிய செய்தி இது.

"வேந்தொடு மாறுகோடல் விளிகுற்றார் தொழிலது ஆகும்
காய்ந்திடு வெகுளி நீக்கிக் கைகட்டி இவனை உய்த்தால்
ஆய்ந்திடும் அழற்சி நீங்கும் அதுபொருள் என்று நல்ல
சாந்துடை மார்பன் தாதை தன்மனத்து இழைக்கின் றானே"
– சீவக 1089

அரசர்களின் கோபத்தீ பெரிய செல்வத்தை அபராதமாகச் செலுத்தினால் நீங்கி விடும்.

"மன்னர்தம் வெகுளி வெந்தீ மணிமுகில் காண மின்னிப்
பொன்மழை பொழியின் நந்தும்" – சீவக 1117

அரசர்கள் ஒரோவழி தேவியர் பலரைத் துணை வலி கருதி மணந்து கொள்ளலாம். ஆனால் குடிமக்கள் ஒருவர் ஒருத்தியொடுதான் வாழ வேண்டும் என்ற வரையறை கொள்ளின் நாடு சிறக்கும். அரசனுடைய நல்லாட்சியில் இந்த வரையறையைக் குடிமக்கள் பின்பற்றினால் நாடு பகை, பிணி, பசி என்பன இன்றி நலமாகச் சிறக்கும்.

"திருமகன் அருளப் பெற்றுத் திருநிலத்து உறையும் மாந்தர்
ஒருவனுக்கு ஒருத்தி போல உளம் மகிழ்ந்து ஒளியின் வைகிப்
பருவரு பகையும் நோயும் பசியும் கெட்டு ஒழிய" – சீவக 2377

பொதுவாகப் பெண்ணை பெற்றவர்கள் வலியச் சென்று தம் மகளை இளையவன் ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்கும் வழக்கம் இன்று.

"யாம் மகள் ஈதும் நீர் மகட் கொண்மின் என யாரும்
தாம் மகள் நேரார்" – 1056

பொதுவாக மகளிர் தாம் பெருவனப்பினராயினும் தம் பெற்றோரால் தமக்குக் கணவராக முடிவு செய்யப்பட்டவர் விகார உருவினராயிருப்பினும் மனத்தை அமைதிப்படுத்திக் கொண்டு மணப்பதே வழக்கம்.

"நம்புநீரர் அல்லர்நன் குரங்கு நீரர்ஆயினும்
தம்குரவ்வர் தாம் கொடுப்பின் நெஞ்சு நேர்ந்து தாழ்வர்தாம்
பொங்கு அரவ்வ அல்குலார்" 1997

உ. ஆசிரியன்

உயர்ந்த ஆசிரியன் தான் பாடம் பயிற்றியதற்குக் குருதச்சிணையாக மாணாக்கனுடைய நன்மைக்கு உரிய செயல்களையே வேண்டுவான். சீவகன் அவன் பகைவனான கட்டியங்காரனை, தன் பிறப்பினை ஆசிரியர் வாயிலாக அறிந்த அப்போதே சீவகன் கட்டியங்காரனை எதிர்ப்பதற்குத் துடித்தான். அவனை ஒராண்டுக் காலம் காலம் தாழ்த்தச் செய்ய ஆசிரியர் அவன் ஒராண்டுக் காலம் காலம் தாழ்த்திப் பின்னரே கட்டியங்காரனோடு போரிடுவதனைத் தமக்குக் குருதச்சிணையாக வேண்டிப் பெற்றார்.

"வேண்டுவல் நம்பியானோர் விழுப் பொருள் ! என்று சொல்ல
ஆண்தகைக்குரவிர்! கொள்மின் யாதுநீர் கருதிற்று ! என்ன,
ஆண்டு நேர் எல்லை யாக அவன் திறத்து அழற்சி யின்மை
வேண்டுவல்! என்று சொன்னான் ; வில்வலான் அதனை நேர்ந்தான்"
– 393

உயர்ந்த ஆசிரியன் உலகியல் பற்றிய எல்லா அறிவு நூல்களிலும் வல்லனாய் இருந்ததோடு ஆன்மீக உபதேசமும் அருள வல்லவனாய் இருப்பான். சீவகன் தன் ஆசிரியனிடம்

"நாமகள் நலத்தை எல்லாம் நயந்து உடன்பருகி நன்னூல்
ஏமுத லாய எல்லாம் படைக்கலத் தொழிலும் முற்றிக்
காமனும் கனிய வைத்த புலம் கரை கண்டு கண்ணார்
பூமகள் பொலிந்த மார்பன் புவிமிசைத் திலகம் ஒத்தான்"–சீவக.370

பிறகு ஆசிரியன் சீவகனுக்கு நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் என்ற மும்மணிகளையும் உபதேசித்து அவனுக்கு வரம்பில் இன்ப உலகக் கதவினை திறந்து வைத்தான் என்கிறார் தேவர் பெருமான்.

"காட்சி நன்னிலையின் ஞானக் கதிர்மணிக் கதவு சேர்த்திப்
பூட்சி சால் ஒழுக்கம் என்னும் வயிரத்தாழ் கொழுவிப் பொல்லா
மாட்சியில் கதிகள் எல்லாம் அடைத்தபின் வரம்புஇல் இன்பத்து
ஆட்சியில் உலகம் ஏறத் திறந்தனன் அலர்ந்த தாரான்" – 381

சீவகன் கனகமாலையின் சகோதரர்களுக்கு ஆசிரியனாய் இருந்து தனுர்வேதம் கற்பித்தபோது கனகமாலையினுடைய தோழியிடம் கூறிய சொற்களும் நினைவுகூறத்தக்கன. கனகமாலை கொடுத்த மாலையைத் தோழி, சீவகனுக்கு அளிக்கச் சீவகன் அதனை மறுக்கத் தோழி அரண்மனையில் இருப்பவர்கள் ஐம்பொறி அடக்கத்தோடு இருக்க வேண்டும் என்று அரசனை அஞ்சி மறுக்கிறாயா? என்று வினவ, "ஆசிரியனாகப் பணிபுரியும் எனக்கு உன் இளவரசியின் மாலையை ஏற்றுக்கொள்ளுதல் தகாது" என்ற சீவகன் கூற்றில் ஆசிரியன் புலனடக்கத்தோடு செயற்பட வேண்டும் செய்தி வலியுறுத்தப்படுகிறது.

"மன்னர் கோயில் உறைவார் பொறி செறித்த மாண்பினரே
என்ன அஞ்சினாய் என்று அவனை நக்காட்க அஃது அன்று, கோதாய்
இன்ன கொள்கையேற்கு ஏலாது என்ன" – 1669

என்ற பாடல் அடிகளையும் நோக்குக.

3. *மாணாக்கன்*

சீவகன் மாணாக்கன் என்ற நிலையில் செல்வச் செருக்கின்றி வழிபாட்டோடு தன் ஆசிரியனிடம் கல்வி பயின்ற செய்தி,

மதலைமையாடுக என்றே
பொனங்கொடி இறைஞ்சி நின்று பூமகள் புலம்பிவைக
அனங்கனுக்கு அவலம் செய்யும் அண்ணல் நந்றாய் உரைத்தாள்
–367

செல்வச் செருக்கின்றி வழிபாட்டோடு கற்றலின் பூமகள்புலம்பிவைக என்று கூறப்பட்டது.

"சீவகன் ஆசிரியர் வேண்டுகோளை அரிதின் நிறைவேற்றிய செய்தி
ஊன்பிறங்கு ஒளிறும் வேலான் ஓர்த்துத்தன் உபாத்தி சொல்லான்
தான்புறம் கட்டப்பட்டுத் தன்சினம் தணிந்து நிற்ப" – 1090

என்ற குணமாலையார் இலம்பகப் பாடலால் பெற்றோம்.

சீவகனிடம் மத்திம தேசத்து ஏமமாபுரத்து மன்னன் தடமித்தன் தன் புதல்வர் ஐவரைத் தனுர்வேதம் பயிலுமாறு மாணாக்கராக்கினான். அவர்கள் சீவகனுடைய அடிகளை வணங்கி நிழலின் அகலாதவர்களுக்குச் சீவகன் நினைத்தவற்றை எல்லாம் நிறைவேற்றி நெருப்பினிடம் அகலாதும் அனுகாதும் பழகுபவர்களைப் போலச் சீவகனிடம் பொருந்திக் கல்வி பயின்றார் என மாணாக்கர் இயல்பினைத் தேவர் இயம்பியுள்ளார்.

கழலின் செந்தாமரை அடிகள் புல்லித்தம் காதல் கூர
நிழலின் நீங்கார் நினைத்தன நினைப்பின் அமைவான் ஆக்கி
அழலின் சாராது அகலாது ஒழுகிக் கல்வி பயின்றனர் – 1648

என்ற பாட்லை நோக்குக.

௪ மகளிர்

மகளிருள் கற்புடை மகளிர், கற்பில் மகளிர், பொது மகளிர் என்ற முத்திறத்தார் பற்றியும் செய்திகள் காணப்படுகின்றன. மகளிர் உள்ளம் பற்றிய பொதுவான செய்திகளும் கூறப்படுகின்றன.

அ. கற்புடை மகளிர்

சாமெனின் சாதல் நோதல் தன்னவன் தணந்த காலைப்
பூ மனும் புனைதல் இன்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை என்றும் சொல்லார் கணவற்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோடு ஒப்பார் சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார்
– 1598

ஆ. கற்பில் மகளிர்

குழற்சிகைக் கோதை சூட்டிக் கொண்டவன் இருப்ப மற்றோர்
நிழல்திகழ் வேலி னானை நேடிய நெடுங்கண் ணாளும்
வில்பொருதோள் மன்னா விலங்காய்ப் பிறப்பதே
இடும்பை நோயிக்கு இரைகளா வார்கள். – 252

இ. வரைவில் மகளிர்

அல்குல் விலைபகரும் ஆய்தொடியார் அறியார்

பொதுவாக

பெண் எனப் படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கார்
உள்நிறை உடைய அல்ல ஓராயிரம் மனத்த ஆகும்
– 1597

பகைவர் உள்ளமும் பாம்பின் படர்ச்சியும்
வகைகொள் மேகலை மங்கையர் நெஞ்சமும்
மிகைசென் மேகத்து மின்னும்செந் நில்லலா – 1816

ஏதம் இன்னன இன்னணம் எய்தலால்
பேதை யாரொடும் பெண்ணொடும் பேசன்மின் – 1815

என்பனவற்றால் பெண்களின் பொருள்வேட்கை, சலனபுத்தி, இரகசியம் பேணாமை என்ற இயற்கைப் பண்புகளைக் கற்புடைப் பெண்கள் தம் கற்பின் உறுதியால் வென்று நிற்பர் என்பதும் குறித்து உணரத்தக்கது.

பெண்கள் கோயிலில் இறைவழிபாடு செய்யும் போது இடமுழந்தாளை ஊன்றி தம் கூந்தல் தம் வலத்தோளில் விழுமாறு கழுத்தை வலப்புறம் சாய்த்துக் கொண்டு தலையால் தரையில் வணங்கிப் பின்னெழுந்து இரு கைகளையும் கூப்பி வழிபடல் வேண்டும் என்ற செய்தி,

பொன்னிலம் சென்னி புல்ல இடமுழந் தாளை ஊன்றி,
மின்னவிர் மாலை மென்பூங் குழல்வலத் தோளில் வீழக்,
கன்னியங் கமுகின் கண்போல் கலன்அணி எருத்தம் கோட்டித்
தன்னிரு கையும் கூப்பித் தையல் ஈது உரைக்குமன்றே – 2056

என்ற பாடலில் காணப்படுகிறது.

5. தலைவன் தலைவியர் உள்ள நிலை

கணவன் இறந்த செய்தி கேட்டால் தலைவி உயிர் தானாகவே நீங்கிவிடும். தலைவி இறந்த செய்தி கேட்டால் தலைவன் உயிர் தானாகவே நீங்கிவிடும். தலைவன் உயிரோடு இருக்கிறான் என்பது தலைவி உயிரோடு இருப்பதனை உட்கொண்டேயாம் – என்ற இச் செய்தியையும் சீவக சிந்தாமணி இயம்பியுள்ளது.

கட்டியங்காரன் இறந்த செய்தி அவன் தேவிக்கு அறிவிக்கப்பட்டது.

மாலேறு அனையா னொடு மக்களுக்கு அஃதோ என்னா
வேல்ஏறு பெற்ற பிணையின் நனி மாழ்கி வீழ்ந்து
சேல்ஏறு சின்னீ ரிடைச் செல்வன போன்று செங்கண்
மேல் ஏறி மூழ்கிப் பிறந் தாழ்ந்த விறந்து பட்டாள்

– 2344

செய்தி கேட்ட கட்டியங்காரன் தேவி உடனே இறந்த செய்தி இவ்வாறு இயம்பப்படுகிறது.

காந்தருவதத்தையைப் பிரிந்து நான்கு திங்கள் கழிந்த நிலையில் ஒரு பொய்கைக் கரையை அடைந்து அங்கு ஊடியும் கூடியும் இன்புறும் அன்னங்களை நோக்கிய சீவகன் காந்தருவதத்தையின் நினைப்பு மேலிட அவன் தன்பிரிவால் உள்ளம் உருகிக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள் என அவளை நினைத்து உளம் உருகினான். அவள் ஒரு கால் இறந்து போயிருப்பாளோ என்று ஒரு கணம் கற்பனை செய்து அடுத்த கணம் அவள் இறந்திருந்தால் என் உயிரும் என் உடலை விட்டுப் பிரிந்து போயிருக்குமே யான் உயிரோடு இருப்பதால் அவளும் உயிரோடு இருப்பாள் என்பது உறுதி. அவள் விஞ்சையில் வல்லவள். என் இன்றைய நிலையை அவள் நன்கு அறிந்திருப்பாள் என்று ஆறுதல் அடைகிறான்.

"காதலால் உடல் உன் உயிர் கைவிடின்
ஏதம் என்னுயிர் எய்தி இறக்கும் மற்று
ஆதலால் அழிவு ஒன்றிலள் அல்லதூம்
மாதர் விஞ்சையும் வல்லளும் அல்லளோ" – 1631

என்ற பாடலை நோக்குக.

6. கன்னியர்

திருமணம் ஆகாத பெண்கள். இவர்கள் தங்கள் உள்ளத்து எழும் காமநோயை மிக நெருங்கிய தோழியருக்கும் புலப்படுத்தாது தம் உள்ளத்துள்ளேயே ஒடுக்கி அழித்துவிடுவர்.

"கன்னியர் உற்றநோய் கண்ண னார்க்கும் அஃது
இன்னதென்று உரையலர் நாணின் ஆதலால்
மன்னும் யான் உணரலேன் மாதர் உற்றநோய்
துன்னிநீ அறிதியோ தோன்றல் என்றதே" – 1028

என்ற குணமாலையின் கிளி சீவகனிடம் கூறிய செய்தி யானும்.

> "என்றாள் நினைந்தாள் இது போலும் இவ்வேட்கை வண்ணம்
> சென்றே படினும் சிறந்தோர்க்கும் உரைக்க லாவது
> அன்றாய், அரிதாய், அகத்தே சுட்டு உருக்கும் வெந்தீ
> ஒன்றே உலகத்து உறுநோய்மருந்துஇல்லை என்றாள்"

என்ற சீவகனைக் கண்ணுற்றுக் காமுற்று மருந்து பிறிது இல்லாது வருந்திய விமலை நினைப்பினாலும்,

> "மன்னவர் நிரைகொண் டாரை வளநகர்த் தந்து மன்னன்
> பொன்அவிர் கழலில் தங்கள் புனைமுடி இடுவி யேனேல்
> இன்னிசை உலகந் தன்னுள் என்பெயர் சேறல் இன்றாய்க்
> கன்னிய மகளிர் நெஞ்சின் காமம்போல் கரக்க என்றான்"
> –1861

என நிரை கவர்ந்த மன்னரை வென்று அந்நாட்டு மன்னன் தடமித்தன் திருவடிகளில் பணியுமாறு செய்யவில்லையாயின் தன்புகழ் கன்னியர் உள்ளத்துள் காமம் நாணத்தால் உள்ளத்துள்ளேயே கிடந்து தேய்ந்து மறைவதுபோல மறைக என்று சீவகன் கூறிய வஞ்சினத்தாலும், நாண் துறவாக் குலமகளிராய்த் தோன்றிக் காமஞ் சான்ற இளையோராகிய காலைக் கன்னி மகளிர் நெஞ்சில் காம உணர்வு தோன்றினும் அதனை அவர்கள் மறைத்துத் தேய்த்தும் போக்கும் இயல்பினர். உயிரினும் சிறந்தன்று நாண் என நாணத்திற்கே காமத்தினும் முதலிடம் நல்குவர் என்ற செய்தி கன்னியர் திறத்துக் கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யாதல் பெறப்படும்.

7. நண்பர்கள்

நண்பர்கள் எந்த நிலையிலும் தம் நண்பனை விடுத்து நீங்காதவராய், செவிலித்தாய் போன்று நண்பன் நலத்தைப் பாதுகாத்துத் தாமும் ஆமை போன்று ஐம்பொறிகளும் நெறியல் நெறியில் செல்லாமல் அடக்கி, நண்பன் தவறுகள் செய்யும்போது அவனைப் பகைவர் போல ஒறுத்து அடக்கி, உணவு வழங்கும் திறத்தில் மனைவியைப் போன்று இருந்து நண்பனை பாதுகாக்க வேண்டும் என்று சீவகன் தம்பி நந்தட்டன் பதுமுகனிடம் கூறிய கூற்றில் நண்பர்களின் கடமை பெறப்படுகிறது.

"பொருந்தலால் பல்லி போன்றும் போற்றலால் தாயர் ஒத்தும்
அருந்தவர் போன்று காத்தும் அடங்கலால் ஆமை போன்றும்
திருந்துவேல் தெவ்வர் போலத் தீதற எறிந்தும் இன்ப
மருந்தினான் மனைவி ஒத்தும் மதலையைக் காமின் என்றார்"
– 1895

என்பது அப்பாடல்.

8. தம்பி

பொருளைத் தேடலாம், பகைவரை அழிக்கலாம். நண்பர், பெண்டிர், மக்கள் என்ற யாவரையும் பெறலாம். ஆனால் உடன்பிறப்பாகிய தம்பியைப் பெறுதல் அரிது. தம்பி ஒருவன் இருந்தால் ஒருவன் எவ்விதக் கவலையும் இன்றி வாழலாம் என்று சீவகன் தன் தம்பி நந்தட்டனைப் பற்றிக் கூறினான்.

"திண்பொருள் எய்த லாகும் தெவ்வரைச் செருக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையும் நண்ண லாகும்
ஒண்பொருள் ஆவ தையா உடன்பிறப்பு ஆக்கலாகா
எம்பியை ஈங்குப் பெற்றேன் என்எனக்கு அரியது என்றான்"
–1760

9. தேவியர்

தேவியர் எவ்வளவு ஆற்றல் உடையவராய் இருப்பினும் தம் ஆற்றலால் தம் கணவர் துயரைத் துடைக்க முற்படுவது கணவரின் பெருமைக்கு இழுக்கு ஆதலின் அத்தகைய செயல்களில் ஈடுபடார். தம் கணவருக்கு ஒரு துன்பம் ஏற்படின் அது நம் தீவினையால் ஏற்பட்டதாக கருதி வருந்துவர். சீவகனைக் கட்டியங்காரன் வீரர்கள் சூழ்ந்தபோது தன் விஞ்சையில் அவனை ஒரே கணத்தில் விடுவித்திடல் கூடும் எனினும் தத்தை அச்செயலைச் செய்யத் தயங்கினாள்.

"மன்னன் செய்த சிறைமாகடலுள் குளித்து ஆழ்வுழித்
தன்னை எய்திச் சிறைமீட்டனள் தன் மனையாள் எனின்
என்னை யாவது இவன் ஆற்றலும் கல்வியும் என்று உடன்
கொன்னும் வையம் கொழிக்கும் பழிக்கு என் செய்கோ தெய்வமே"
– 1149

என்பது தத்தையின் உள்ள நிலை.

மேவி நம்பிக்கு வெம்பகை ஆக்கிய
பாவி யேன் உயிர் பாழுடல் பற்றுவிட்டு
ஆவியோ நடவாய் என்று அழுது தன்
காவி வாட்கண் கலங்க அதுக்கினாள் சீவக– 761

என வீணைப்போரில் தோற்ற மன்னர், வீணைப்போரில் வென்று தத்தையால் மணமாலை சூட்டப்பட்ட சீவகனைத் தாம் ஒருங்கு கூடி எதிர்க்க முற்பட்டதனைக் கண்ட தத்தை சீவகனுக்கு தன்னால் பகைவர்களை எதிர்க்கும் நிலை ஏற்பட்டது கண்டு வருந்தித் தத்தை துயருற்ற செய்தியை இப்பாடல் இயம்புகிறது.

10. தோழி

இவள் தலைவிக்கு உயிர் போலாவாள். தலைவியின் தந்தையும் தாயும் இல்லாவிடத்து அவளுக்குத் தந்தையும் தாயும் போல உதவுபவள். தான் உயிருடன் உள்ளவரைத் தலைவிக்கு எந்தவித ஏதமும் வராமல் பாதுகாப்பாள்.

"உடம்பினொடு உயிரில் பின்னி ஒருவயின் நீங்கல் செல்லா
நெடுங்கணும் தோளும் போலும் நேரிழை அரிவை நீநின்
தடங்ணி தனிமை நீங்கத் தந்தையும் தாயும் ஆகி" – 556

என்று கலுழவேகன் என்ற மன்னன் காந்தருவதத்தையின் தோழி வீணாமதியிடம் கூறிய கூற்றில் தோழியின் சிறப்பு புலப்படுதல் காணப்படும்.

குணமாலையை நோக்கி மதம் கொண்ட அரச வேழமாகிய அசனிவேகம் தாக்கவந்த நேரத்தில் குணமாலை அமர்ந்திருந்த சிவிகையைச் சுமந்து வந்தவர், சிவிகையைக் கீழே வைத்துவிட்டு சிதறி ஒட அவள் தோழி என் தலைவியைக் காக்க ஆடவர் ஒருவரும் இல்லையோ என்று அரற்றிக் கை கூப்பி நின்றாள். ஆடவர் ஒருவரும் அணுகவாராமை கண்டு இந்த யானை என்னைக் கொன்றபிறகே குணமாலையை நோக்கிச் செல்லும் அதற்குள் ஒருவன் வந்து இவளை காக்க வேண்டும். ஒருவனும் வராவிட்டாலும், என் தலைவி குணமாலை யானையால் துன்புறுத்தப்படுதலைக் காணாமல் யான் இறந்துவிடுவேன். பின் எது வேண்டுமானாலும் விதிப்படி நடக்கட்டும் எனக் குணமாலையின் தோழி கூறிய கூற்றில் தோழியின் கடமை உணர்ச்சி புலப்படுகிறது.

“கருந்தடங் கண்ணி தன்மேல் காமுகர் உள்ளம் போல
இருங்களிறு எய்த ஓடச் சிவிகைவிட்டு இளையர் ஏக
அரும்பெறல் அவட்குத் தோழி ஆடவர் இல்லையோ என்று
ஒருங்குகை உச்சி கூப்பிக் களிற்றெதிர் இறைஞ்சி நின்றாள்” –975

“என்னைக் கொன்று இவள்கண் ஓடும் எல்லையில் ஒருவன் தோன்றி
இன்னுயிர் இவளைக் காக்கும் அன்றெனின் என்கண் மாய்ந்தால்
பின்னைத்தான் ஆவது ஆக என்று எண்ணிப் பிணைகொள் நோக்கி
மின்னுப் போல் நுடங்கி நின்றாள் வீததை பொற்கொம்பு ஒப்பாள்”
– 976

என்பன காண்க.

II. மைத்துனன்

கணவனுடைய தம்பி மைத்துனனாவான். அண்ணன் மனைவி அவளிடம் தாயன்பு செலுத்துவாள். அவன் தன் அண்ணன் மனைவியைத் தாய் போலக் கருதி வணங்குதலும், அண்ணன் மனைவி மைத்துனன் துன்புறுங்காலத்து அவன் துன்பத்தைப் போக்க நன்றாய் இயன்ற உதவி செய்தலும் கட்டமை ஒழுக்கமாகும்.

சீவகன் தன் தம்பி நந்தட்டனைத் தன் தேவி கனகமாலைக்கு அறிமுகம் செய்து வைக்க அவள் கூறும் கூற்று இது.

“கொழுநனைக் குறிப்பி னாலே குமரன்யார் என்று நோக்கக்
கழுமிய கற்பி னாய்நின் மைத்துன் ஐயன் என்ன
எழுமையும் பெறுக இன்ன இளங்கிளைச் சுற்றம் என்றாள்
கொழுமலர்த் தடங்கண் செவ்வாய்க் குவிமுலைக் கொம்ப னாளே”
– 1720

சீவகன் தங்கள் கண்களுக்கு புலனாகாமல் மறைந்த இடம் தெரியாமல் வருந்திய தம்பி நந்தட்டன் தோழன்மார் இவர்களுள் நந்தட்டன் தன் அண்ணியாகியவளும் விஞ்சையில் வல்லவளும் ஆகிய காந்தருவதத்தை ஒரு தாய் தன் அண்ணன் சீவகன் இருக்கும் இடம் பற்றி அறிந்திருக்கலாம் என்ற எண்ணத்தில் அவளைக் காண அவள் இல்லத்துக்கு வந்தான்.

ஐவிலின் அகல நின்றாங்கு அடிதொழுது இறைஞ்சி னாற்கு
மைவிலை பெற்றகண்ணாள் மைந்தனை மருண்டு நோக்கிக்
கைவிலும் கணையும் இல்லாக் காமன் போந்திருக்க என்ன
மொய் வெல்லும் குருதி வேலான் மூவிற்கண் இறைஞ்சி நின்றாள்
– 1704

"திங்கள்வாள் முகமும் நோக்கான் திருமுலைத் தடமும் நோக்கான்
அங்கதிர்க் கலாபம் மின்னும் அணிஅல்குல் பரப்பு நோக்கான்
செங்கயல் கண்ணி னாள்தன் சீறடிச் சிலம்பு நோக்கி
எங்குளார் அடிகள் என்னா இன்னணம் இயம்பி னானே" – 1705

என்ற பாடல்களில் நந்தட்டன் அண்ணியாரைப் பணிந்த திறத்தைக் காண்கிறோம்.

தத்தை நந்தட்டனை ஒரு படுக்கையில் இருத்தி அங்காமினி மந்திரம் ஓதி அவனை ஏமமாபுரத்தில் சீவகனை ஒத்த வடிவத்தனாக வடிவு மாற்றிச் சேர்ப்பித்த திறத்தில் அண்ணி மைத்துனனுக்கு உதவிய திறம் உணரப்படுகிறது.

12. வீரன்

ஒரு பெண்ணை ஆபத்திலிருந்து மீட்கத் தன் உயிரையும் பொருட்படுத்தாது செயற்படுவான். தனக்கு ஓர் ஆபத்து வந்தவிடத்து அதனை நீக்கத் தன் மனைவி முயல்வதனை விரும்பாது உயிரையும் விடத் துணிவான்.

"குணமாலையை மதயானை தூக்கவந்த போது
பெண்ணுயிர் அவலம் நோக்கிப் பெருந்தகை வாழ்வில் சாதல்
எண்ணினன்..... களிற்றை வையா ஆர்த்துமேல் ஒடினான்" – 978

தன்னை கட்டியங்காரன் படைகள் சூழ்ந்த போது, தன் மனைவி காந்தருவதத்தை தன்னை விஞ்சையால் காப்பாற்றுதலை விரும்பாத சீவகன், விஞ்சை நண்பன் சுதர்சணன் உதவியில் தன்னைக் காத்துக் கொண்டான்.

"மாநகர் சுடுதல் ஒன்றோ மதனனை அழித்தல் ஒன்றோ
வானிகர் இல்லா மைந்தர் கருதிய ததுவு நிற்க
லேய் நிகர் இல்ல தோளி விஞ்சையால் விடுத்துக் கொள்ளப்
போய் உயிர் வாழ்தல் வேண்டேன் எனப் பொருள் சிந்திக்கின்றான்"
– 1152

"என்னை இக் கிருமி கொன்று என் தோழனை நினைப்பல்"
– 1154

என்றான்

சில திங்கள் கழித்துச் சீவகன் தன் தம்பி நந்தட்டனை மத்திமதேச ஏமமாபுறத்துத் தடமிததன் மகள் கனகமாலையுடன் இருந்தபோது சந்தித்து அவனிடம் பழைய செய்திகளை உரையாடிய போது, கட்டியங்காரன் படை வீரர்கள் தன்னைச் சூழ்ந்து வரத்தான் நடந்து சென்றபோது, தன் நண்பர்களும் மனைவி காந்தருவதத்தையும் தன்னை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டதைக் கண்டதாகவும், தத்தை மீட்டு காப்பதனை விட தான் இறத்தலையே விரும்பியதாகவும் குறிப்பிடுகின்றான். பின் இயக்கனை எண்ணித் தப்பியதனைக் குறிப்பிடுகின்றான்.

"கூடநீர் நின்ற பெற்றி கண்டு இப்பால் நோக்குவேற்கு ஓர்
கேடகம் வாளொடு ஏந்திக் கெடுக இந் நகரம் என்னா
மாடத்தின் உச்சி நின்ற மலைமகள் தன்மை கண்டே
ஆடவர்க்கு உழுவை ஒப்பாய் அஞ்சினேன் அதன்கண் என்றான்"
–1751

பெண் இடர் விடுப்ப வாழ்வில் சாதலே பெரிது நன்றென்று
எண்ணினேன் நமர்கள் வீயும் இயல்பினான் நெருங்கப்பட்டு
கண்ணி நான் இயக்கன் தன்னைச் சிந்தித்தேன் கடவுள் வாழ்த்தி
அண்ணல் வந்து அழுங்கத் தோன்றி ஆங்கென்னைக் கொண்டு
போந்தான் – 1752

என்ற பாடலை நோக்குக.

13. கலைஞன்

கலைஞன் அரிதின் முயன்றுதான் கற்ற கலையில் முழுப்புலமையும் உடையவனாய் இருத்தல் வேண்டும். சீவகன் வீணாமதி தனக்கு வழங்கிய வீணைகள் நரம்பு இவற்றை ஆராய்ந்து கூறிய கூற்றிலும் (சீவக 717–721) தடமித்தன் மைந்தர்களுக்கு தனுர்வேதம் பயிற்றிய திறத்திலும் (சீவக 1676–81) கலைஞனுடைய அறிவாற்றல் பேசப்படுகிறது.

14. மன்னன்

தன் குலத்துப் பெண்ணையே முதலில் மணத்தல் வேண்டும். மகளிர் பலரை மணத்தலும் அரசர்க்கு உரியதாம். மக்களின் வரியை நீதிமுறைப்படி தண்டல் வேண்டும். குலப் பகைவர்களை அழிக்கும் காலத்தை எதிர்பார்த்து இருத்தல் வேண்டும். பகைவர் இருவருக்குள் உட்பகை மூட்டி அவர்களை அழித்தல் வேண்டும். நண்பர்களைப் பெருக்குதல் வேண்டும். ஒற்றர்களையும் மற்றஒற்றர்கள் கொண்டு ஆராய வேண்டும். அமைச்சர்களை கண்ணெனக் கொள்ள வேண்டும். பொருள் வருவாயை நேரிய முறையில் பெருக்க வேண்டும். போர்க்களத்தில் வீரத்தின் வழாமையும் அரசர்களுக்கு இன்றியமையாததாகும்.

சீவகன் –

"கன்னியர் குலத்தின் மிக்கார் கதிர்முலைக் கன்னி மார்பம்
முன்னினர் முயங்கின் அல்லால் முறிமிடை படலை மாலை
பொன்இழை மகளிர் ஒவ்வா தவரைமுன் புணர்தல் செல்லார்
இன்னதால் முறைமை மாந்தர்க்கு என மனத்து எண்ணி னானே"

சீவக – 483

நலிவில் குன்றொடு காடுறைநன்பொருள்
புலியனார் மகட் கோடலும் பூமிமேல்
வலியின் மிக்கவர் தம்மகட் கோடலும்
நிலைகொள் மன்னர் வழக்கென நேர்பவே – 1919

நீதியால் அறுத்து அந்நீதி ஈட்டுதல்
ஆதி யாய அரும்பகை நாட்டுதல்
மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல்
பேது செய்து பிளந்திடல் பெட்டதே – 1920

ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்றமாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொற்றவர்க்கு என்பவே – 1921

வென்றி ஆக்கலும் மேதகவு ஆக்கலும்
அன்றி யும்கல்வி யோடழகு ஆக்கலும்
குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தி னாய்பொருள் செய்யுமே – 1922

பொன்னின் ஆகும் பொருபடை அப்படை
தன்னின் ஆகும் தரணி தரணியின்
பின்னை ஆகும் பெரும்பொருள் அப்பொருள்
துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே – 1923

செய்க பொருள் யாரும் செறுவாரைச் செறுகிற்கும்
எஃகு பிறிதில்லை இருந்தே உயிரும் உண்ணும்
ஐயம் இல்லை இன்பம் அறனோடு அவையும் ஆக்கும்
பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே – 497

இவற்றால் நாட்டில் முதல் குடிமகனாக வாழும் அரசன் முதல் தன் காமம் நிறைவேறாக் கன்னி முடிய உள்ள பலதிறமக்களுக்கும் அறநூல்களால் வரையறுத்தமைத்த நடைமுறை ஒழுக்கங்களை மக்கள் பின்பற்றி அமைதியாக வாழ்தல் வாழ்க்கையின் அறவெற்றிகளுள் ஒன்றாம்.

அடுத்த இதழில் தொடரும் .....

☘☘☘☘☘

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ.குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.
ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484

மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு

அறிஞர்களே!
புலவர்களே!
சான்றோர்களே!

தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம் மற்றும் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் குறித்த கட்டுரைகளை வழங்குவீர்!

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-5575615

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707